
செந்தமிழ்ச் செல்வி



அரசு

சிலம்பு ௫௮ (… வ.) ஆண்டு … பரல் - ௧௨

ஆக: … 1984

"செந்தமிழ்ச் செல்வி"

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

உள்ளுறை

	பக்கம்
தமிழ் ஆக்கம்பெற வேண்டுமானால்?	சசுரு
தமிழைக் காப்பாற்றுங்கள்—முதல்வருக்கு வேண்டுகோள்	சசுஎ
முறைப் பெயர் ஆய்வு	சஎ0
ஆட்சிமொழிச் சிந்தனைகள்	சஎங
பழுதுபட நினையேல்	சஎஎ
சங்க நூல்களில் நாகமும் வழையும்	சஅங
எண்மர் எண்மணிமாலை	சஅஎ
கலைக்களஞ்சியக் கலை	சஅகூ
சிவஞானப் பயன்	சகூஎ
"அமைச்சு" வடசொல்லன்று	ரு0உ
பாஸ்கரசேதுபதி பாடிய திருவாலவாய்ப் பதிகம்	ரு0ங
சிந்துவெளி முத்திரைகளில் செந்தமிழ்ச் சொற்கள்	ரு0எ
செய்திகள்	ரு0கூ
மதிப்புரை	ருகக

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-ருஅ   தி. வ. ஆண்டு உ0கரு, ஆடி   பரல்-கஉ

ஆகஃச்டு 1984

தமிழ் ஆக்கம் பெறவேண்டுமானுல்...?

உலகில் வேறு எம்மொழிக்கும் இல்லாத தனிச்சிறப்பு தமிழ் மொழிக்கு உண்டு. அதே நேரத்தில் அம் மொழியைப் பாதுகாக்கும் பணியில் அறிஞர்கள் பன்னெடுங்காலமாக ஈடுபட்டு, அதற்கெனப் போராடுவதிலேயே தம்முடைய அறிவு - ஆற்றல் - பொழுது இவற்றைச் செலவிடவேண்டிய அவலநிலையும் இத் தமிழ்நாட்டில் தான் காணப்படுகிறது.

நூல் நெசவு செய்பவன் நெசவினைச் செய்துகொண்டேவர, அருகிருந்து ஒரு குரங்கு அதனை அறுத்துவிட்டுக்கொண்டேயிருப்பதுபோல் தமிழின் ஆக்கத்திற்குத் தமிழறிஞர்கள் எத்துணைதான் முயன்று - போராடி - பேசி - எழுதி வந்தாலும், ஒரு சாரார், அம் முயற்சிகட்குப் பல இடையூறுகளை இழைத்தே வருகின்றனர். இக் கொடுமை காலத்திற்கு - சூழ்நிலைக்கு - அரசியல் நிலைக்கு ஏற்பப் புதுப்புதுக் கோலங்கள் புனைந்து வருகின்றன.

அண்மைக்காலமாக மொழியியல் கல்வி என்ற முறையிலும், ஆங்கிலத்தைச் சிறுவர்க்குக் கற்பிக்கவேண்டும் என்ற முறையிலும் மேல்நிலையில் இலக்கியப் பயிற்சிக்கு இடையூறும் கீழ்நிலையில் குழந்தைப் (நர்சரி) பள்ளிகள் மூலம் தமிழ் மறக்கடிக்கப்பட்டு ஆங்கிலச் சிந்தனையும் செயலும் வளர வழிகோலுதலும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

ஆனுல் பேசப்படுவதோ ''எங்கும் தமிழ் எதிலும் தமிழ்'' என்ற பேச்சு-முழக்கம் எல்லாம்! பயிற்றுமொழி தமிழாதல் வேண்டும் என நாம் பல்லாண்டுகளாக வலியுறுத்திக் கூறிவருகிறேம். ஆனுல் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகப் பட்டப்படிப்பிலும் ஆங்கிலத்துக்குத் தனிப்பெருமையும் தமிழ் மாற்ருந்தாய்ப்பிள்ளையாகக் கருதப்படுதலும் நடைமுறையில் காண்கின்றேம். தனியார் கல்லூரிகளில் தமிழ் பயிற்சிமொழியாதல் திட்டமிட்டுத் தவிர்க்கப்படுகின்றது.

இந்நிலையில் தொடக்கப்பள்ளியில் பயிலும் பிள்ளைகள் ஆங்கிலப் பால்ஊட்டி வளர்க்கப்படுகின்றனர். மைய அரசினுல் நடத்தப்படும்

பள்ளிகளில் இந்தி பயிற்றுவிக்கப்படுகிறது. தமிழைப் பயிற்சி மொழியாகக்கொண்டு படித்துப் பட்டம் பெறுபவர்கட்கு வேலை வாய்ப்பு கிடைப்பதோ அரிதாக இருக்கிறது. இத்தகைய சூழ்நிலைகளை உணர்ந்து மாணவர்களும் ஆங்கிலத்தைப் பயிற்றுமொழியாகக் கொண்டு படித்துப் பட்டம் பெறுதலையே விரும்புகின்றனர். பெற்றோரும் அதற்கேற்பவே நடக்கின்றனர்.

இதற்குக் கரணியம் என்ன? ஆங்கிலம் படித்தால் அலுவல் கிட்டும். ஆங்கிலம் படித்தவர்க்கே சீரும்சிறப்பும் ஏற்படுகின்றன. அதனால்தான் புனல்வழிச் செல்லும் புணைபோல் அரசும் குடிகளும் ஆங்கிலத்தால் ஈர்க்கப்படுகின்றனர். ஆகவே ஆங்கிலத்திற்கு முதன்மைதந்து அம் முதலில்லார்க்கு ஊதியம் இல்லை என்ற நினைப்பும் நிலையும் வளர்ந்துவிட்டன. இதனை மாற்றுவது எங்ஙனம்?

"கொந்தளிப்பில் நல்லதொரு கொள்கை முளைப்பதெங்கே?" என்றார் புரட்சிக்கவிஞர். அதுபோல இததகைய கொந்தளிப்புகட்கிடையில் தமிழ் எப்படி வளரும் - வாழும்? தமிழன் எப்படி முன்னேறுவான்?

எனவே, உண்மையிலேயே தமிழ்வாழ வேண்டுமென்றால், வளரவேண்டுமானால் ஆங்கிலத்துக்கிருக்கும் சிறப்பும் செல்வாக்கும் தமிழுக்கு மாற்றப்படல் வேண்டும். தமிழில் படித்துப் பட்டம் பெற்றவர்க்கே அரசு வேலைவாய்பபுகளில் முதலிடம் என்ற நிலை தோன்றவேண்டும். ஊதியம் கருதிததானே இவ்வுலகமே இயங்கு கிறது? தமிழ்படித்தவர்கட்கே வேலை என்ற சட்டம் உருவானால் யார் அதைத் தடுக்க இயலும்? அரசு இத்தகைய செயல்முறையில் இறங்காதவரை ஏய்த்துப் பிழைப்பவர்க்கே வாழ்வும் வளமும் என்ற நிலைதான் நீடிக்கும்.

இவற்றையெல்லாம் அடிக்கடி சுட்டிக்காட்டி வருபவர் நம் முத்தமிழ்க காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள். இந்தித் திணிபபை எதிர்ப்பதிலும், தனித்தமிழ் ஆக்கம் பெறவேண்டும் என்பதிலும் விடாப்பிடியாக இருந்து போராடிவரும் அவர் அண்மையில் புலவர்குழுக் கூட்டமொன்றில் பேசுகையில், "இப்படியெல்லாம் தமிழ் சீரழிக்கப்படுவது கண்டு நான் தீக்குளிப்பதைத் தவிர வேறு வழியில்லை" என்று பேசியிருக்கிறாரென்றால் அத்தகையோரின் உளப்பாங்கினை அரசினர் எண்ணிபபார்த்தல் வேண்டும்.

தமிழ்மொழியின் ஆக்கம்தான் தமிழினத்தின் முன்னேற்றத்திற்கு வழி என்ற அடிப்படை உண்மையை நாம் உணர்தல் வேண்டும். தமிழக அரசியலின் அடிப்படையே மொழியின் அடிப்படையில்தான் அமைந்துள்ளது என்பதை யாரும் மறத்தலாகாது. எனவே. இவற்றையெல்லாம் எண்ணிப்பார்ததுத தமிழக அரசு ஆவன செய்யுமென்று எதிர்பார்க்கிறோம்.

தமிழைக் காப்பாற்றுங்கள்—முதல்வருக்கு வேண்டுகோள்

[பெயரும் வேண்டான்]

இந்நாள் தமிழக அரசு, பல வழிகளில் 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற கொள்கையை நிலைநாட்டி வருகிறது என்பதில் அட்டியில்லை. தமிழக முதல்வர் தமிழ்ப் பற்றோடு செயல்பட்டு வருகிறார் என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்வது தஞ்சையில் நிறுவப்பட்டுள்ள தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகும். அத்துடன் பாரதியார், பாரதிதாசன் ஆகியோரின் பெயரில் புதிய பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டிருத்தலும் பாராட்டுக்குரிய செயல்கள் என்பதில் ஐயமில்லை. வள்ளல் அழகப்பர் பெயரில் காரைக்குடியில் மற்றும் ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்படும் என முதல்வர் அறிவித்துள்ள செய்தியும் தேன் என இனிக்கிறது. இவை அனைத்தும் தமிழ்ப் பற்றுடையோர், வரவேற்க—பாராட்ட—மகிழ்ந்திட—போற்றிடத் தக்க செய்திகளே. ஆனால் இதே நேரத்தில் கல்லூரிகளும், மற்றுமுள்ள கல்வி நிலையங்களும், முதல்வரின் நோக்கத்திற்கிணங்கத் தமிழை வளர்க்கின்றனவா? அழிக்கின்றனவா என்பதை ஊடுருவிக் காண்கின்றபோதுதான் அச்சமும் கவலையும் நம்மை ஆட்கொண்டுவிடுகின்றன.

தமிழ்ப பல்கலைக்கழகம் தோன்றிய பின்னர் அதைச் சுட்டிக் காட்டி மற்ற பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளும் தமிழைப் பின்னுக்குத் தள்ளிவிடக்கூடும் என்ற அச்சத்தை முதல்வரின் மதிப்பிற்கும் நம்பிக்கைக்கும், அன்புக்குமுரிய சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் சுட்டிக்காட்டியது இபபோது உண்மையாகிக் கொண்டு வருகிறது என்றால் அது மிகையாகாது.

பாரதியார். பாரதிதாசன் பல்கலைக்கழகங்கள் சார்பில் வெளி வந்திருக்கும் விளம்பரங்களே இதற்குப் போதிய சான்றுகளாகும். (Institute/School of Linguistics) என்ற பெயர்களே எங்கும் பேசப்படுகிறது, விளம்பரப்படுத்தப்படுகிறது.

தமிழ் நாட்டுக் கல்லூரிகள்—பல்கலைக்கழகங்கள் பலவற்றில் தமிழார்வமோ தமிழ்ப் பற்றோ இல்லாதவர்கள், அவர்கள் அறிவியல் படித்தவர்கள் என்ற ஒரே காரணத்தால் பேரறிவாளர்கள் என்று மதிக்கப்பட்டு முதல்வர்களாக அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களின் செயல்கள் தமிழுக்குக் குழிபறிப்பதாக இருக்கின்றனவேயன்றித் தமிழை வாழ—வளரச் செய்வனவாக இல்லை.

பாரதிதாசன் இயற்றிய தமிழியக்கப் பாட்டொன்று அவர் பெயர் கொண்ட பல்கலைக்கழகப் பாடத்திட்டத்திலிருந்தே நீக்கப் படுகிறது என்றால் இதைவிட முறைகேடான செயல் வேறு என்ன இருக்கக் கூடும்? ஒரு தமிழாசிரியர் மகனாகப் பிறந்து காலமெல் லாம் தமிழுக்காக—தமிழரசு இயக்கத்துக்காக உழைத்துவரும் ஒருவன் என்ற முறையிலே முதல்வரைக் கேட்கிறேன், ''தமிழைக் காப்பாற்றுங்கள்—தமிழ்த்தாயின் மங்கல நாண் அறுபடுவதைத் தடுத்து நிறுத்துங்கள்'' என்று.

மொழியியல் துறை (Linguistics) என்ற பெயரில் தமிழை வளர்க்கலாம் என்று பேசப்படுகின்றது. தமிழின் வளர்ச்சியை மட்டந்தட்டும் செயல் இதைவிட வேறில்லை. பல்வேறு மொழிகளைப் பயிலும் பரந்த மனப்பான்மை என்ற திரை மறைவில் செய்யப்படும் ஒரு 'மோசடி'யே இது. மொழியியல் என்பது ஓர் இறக்குமதிச் சரக்கு—அதற்கு முதன்மை கொடுத்தால் உணர்ச்சியை எழுச்சியை அடிப்படையாகக் கொண்ட இலக்கியம் அழியும்.

கொச்சைப் பேச்சும் எழுத்துமே மக்கள் தமிழ்—அதுவே சரியான தமிழ் என்பது, அறுவை மருத்துவமே எல்லா நோய்க்கும் ஏற்றது என்பதோடொக்கும். அறுவை ஒரு வரம்புக்குள் நிற்க வேண்டிய மருத்துவம். அதைப் போன்றதே மொழியியல் ஆராய்ச்சி யும் ஆகும்.

மொழியியல் கல்வி இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ப மொழி பெறுகின்ற ஒலி/பொருள் மாற்றங்களே. இதிலும் பொருள் மாற்றத்தைவிட ஒலி மாற்றமே முதலிடம் பெறுகிறது. வேண்டு மானால் இதற்கெனத் தனித்துறை அமையட்டும்.

இன்று உலகெங்குமுள்ள கலப்புத் துறைகள் பல தனித் துறைகளாக மாறிவருகின்றன. எடுத்துக்காட்டு: Physical Chemistry. இயற்பியல் துறைக்கு வேதியல் அறிஞர் தலைவராவ தில்லை; வேதியல் துறைக்கு இயற்பியல் அறிஞர் தலைவராவதில்லை. இந்நாளில் மொழியில் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் தம் மாணவர் களை மொழியியல் துறைக்கு ஈர்க்க முயல்கிறார்கள். இஃது அவர்களை மொழி இயலில் மூழ்கடிக்கச் செய்யும் சூழ்ச்சி எனில் பொருந்தும்.

பாரதியார் பல்கலைக்கழகத்தில் ''தமிழ் அல்லது மொழியியல் முதுகலைப்பட்டமே அடிப்படைத் தகுதியாகப் பெற்றிருக்க வேண்டும்'' என்று அறிவிக்கிறார்கள் என்றால் இதற்கு என்ன பொருள்? அங்ஙனமே பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் மொழியியலுக்கு முதலிடம் தந்து இலக்கிய ஆய்வினை இரண்டாவதாக்கி விளம்பரம் செய்கிறார்கள்.

இவை அனைத்தும் பாரதியார், பாரதிதாசன் பெயரால் தமிழை அழிக்கும் செயலா? வளர்க்கும் செயலா? என்பதை நல்லோர் சிந்தனைக்கே விட்டுவிடுகிறேன். கடந்த மேத்திங்களில் நடைபெற்ற புலவர் குழுவில் பேசிய முத்தமிழ்க்காவலர் அவர்கள் தமிழின் பெயரால் தமிழ்ப் பல்கலைக்கழகங்களில் செய்யப்படுகின்ற தமிழ் அழிவு வேலைகளைச் சுட்டிக்காட்டி ''நான் தீக்குளிப்பதைவிட வேறு வழியில்லை'' என்று பேசியிருக்கிறார்.

எனவே, தமிழ்ப் பல்கலைக்கழகங்களில் இலக்கியத்துறை தனித்து இயங்கவேண்டும். இத்துறையில் அமர்வுபெறும் ஒவ்வொரு வருக்கும் தமிழ் இலக்கிய முதுகலைப் பட்டமே அடிப்படைத் தகுதி யாதல் வேண்டும்.

இன்னுமொன்று :—தமிழகத்தில் தனியார் கல்லூரிகளில் திட்டமிட்டுத் தமிழ் பயிற்று மொழியாவது தடுக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாகத் திருச்சி, புனித சிலுவைக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் இரண்டாயிரம் பேரில் ஒருவர்கூடத் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொள்ளவில்லை. தமிழக அரசு நடத்தும் கல்லூரி களில் தமிழ் ஒன்றே பயிற்று மொழியாக இருத்தல்வேண்டும். தனியார் கல்லூரிகளில் நூற்றுக்கு எழுபத்தைந்து விழுக்காடேனும் (75%) தமிழ் பயிற்று மொழியாக இருந்தால்தான் அரசு கல்வி மானியம் கிடைக்கும் என்று சட்டம் செய்தல்வேண்டும்.

இறுதியாகத் தமிழக முதல்வரவர்கட்கு ஒரு வேண்டுகோள் :

முதல்வரவர்களே! மீண்டும் நினைவுபடுத்துகிறேன். தங்க ளுடைய ஆட்சியில் தமிழின் வாழ்வும் வளமும் தமிழ்ப் பகைஞர் களால் சாய்க்கப்படாதிருக்க வேண்டுமானால்,

1. பல்கலைக் கழகங்களில் தமிழ் இலக்கியத்துறை தனித்து இயங்கவேண்டும். தமிழ் இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர்களே இத்துறையில் அமர்த்தப்பெறல் வேண்டும்.

2. தமிழக அரசுக் கல்லூரிகளில் தமிழ் ஒன்றே பயிற்சி மொழியாக இருத்தல்வேண்டும்.

3. தனியார் கல்லூரிகளில் 75% தமிழ் பயிற்சி மொழி யாகக் கொண்ட வகுப்புகள் இருந்தாலன்றி தமிழக அரசு நிதி உதவி அளித்தலாகாது.

4. தமிழ்ப் பாடநூல் நிறுவனம் மேலும் செவ்வனே செயல் பட வழிவகைகள் காணவேண்டும்.

முறைப்பெயர் ஆய்வு

[கழக இலக்கியச் செம்மல்,
புலவர் இரா. இளங்குமரன்]

(முன் இதழ் ௭௯௰ஆம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற கட்டுரையில் 'தாய்' என்னும் முறைப்பெயர்பற்றிக் கண்டோம். இக் கட்டுரையில் 'தந்தை' என்னும் முறைப் பெயரைக் காண்போம்.

'தந்தை' என்னும் பெயர்க் காரணம், 'பெற்றோர்' என்னும் கட்டுரையிலே கண்டோம். தந்தையை 'அப்பா' என வழங்குவது இந்நாளில் பெருவழக்கு. அப்பன், அப்பர், அப்பு, அப்பச்சி என்ப வற்றின் விளிவடிவு 'அப்பா' என்பதாம். அவ் விளி வடிவே 'அப்பா அழைக்கிறார்'; 'அப்பாவுடன் போகிறேன்' எனப் பெயர் வடிவாகவே வழங்குகின்றது. அப்பே, அப்போ என்பவையும் விளி வடிவுகளே, 'ஏ அப்பே' என்பதும் 'ஏ அப்போ' என்பதும் ''ஏப்பே, எப்பே; ஏப்போ, எப்போ'' என வழங்குகின்றன. அப்பன் என்பது 'அப்பனார்' என வழங்குவதும் உண்டு. அது, 'ஐயன்' ஐயனார் என வழங்குவது போன்றது.

முறைப் பெயராக வழங்கும் இப்பெயர் பிறரை மதித்து வழங்கும் பெயர்களாகவும் அமைகின்றன. தன்னில் மூப்பரையும், இளையரை யும்கூட இச் சொற்களுடன் உறவமைத்து அழைப்பதுண்டு.

அப்பச்சி வாங்க; அப்பு வாங்க; வாங்க அப்பா, வா அப்பச்சி, வா அப்பு, வா அப்பா (வாப்பா) 'வாங்க' வா என முதுமை இளமை கருதிய அமைப்பு அன்றிப், பெயரில் வேறுபாடு இல்லாமை அறிக.

ஐ, ஐயன், ஐயர், ஐயனார் என்பனவும் தந்தையைக் குறிக்கும். ஐயா என்பது இவற்றின் விளி! 'ஐயா' என்பது சில இடங்களில் தந்தையைப் பெற்றவர் பெயராகவும் வழங்கும். அப்பா என்பதைத் தந்தைக்கும், 'ஐயா' என்பதை அவரைப் பெற்றவர்க்கும் முறையாக வழங்குகின்றனர்.

அப்பசாமி, அப்புசாமி, ஐயாசாமி என்பனபோல முறைப் பெயர், பெயர் வடிவில் நிற்றலும் வழக்கு. செல்லப்பன், செல்லப்பா, செல்லையா என்பன போலப் பெயரடையாக இவை நிற்றலும் கண்கூடு.

அப்பன் போல வழங்கும் ஒரு சொல் 'அச்சன்' என்பதாம் மலையாளநாட்டில் அச்சன் என்னும் பெயர் பெருவழக்கிலுள்ளது-

தமிழ்நாட்டில் ஒரு காலத்தில் பெருவழக்காக இருந்ததே. மலையாளம் தனிமொழித் தன்மையடைந்த காலத்தில் பெருவழக்காகக் கொண்டிருக்கக் கரணியமாம், 'எழுத்தச்சன்' என்பான் மலையாள எழுத்துமுறை அமைத்துப் போற்றி வளர்த்த தந்தை ஆவான். 'கண்ணச்சன்' முதலியோர் சிறப்புப்பெற்றவர். அச்சன் பற்று, அச்சன் புதூர் எனபவை தமிழகம், மலையாளம் தழுவிய ஊர்ப் பெயர்கள். இவை, அச்சன் என்னும் சொல் தமிழகத்தில் முற்றாக மறையவில்லை என்பதைக் காட்டும். மாணிக்கவாசகர் அருளிய 'அச்சோபபத்து' அச்சன் வழக்கின் எச்சமாம். அதன் ஒவ்வொரு பாடல் இறுதியிலும், 'அச்சோவே' என்னும் முடிநிலை அமைந்திருத்தல் அறிக. இனி, அச்சச்சா, அச்சச்சோ என்னும் உணர்வுக் குறிப்புகள் இந்நாளில் பெருவழக்குடையவை. அச்சச்சா அச்சச்சோ என்பவை 'அப்பப்பா' அப்பப்போ. அத்தத்தா அத்தத்தோ, ஐயையா, ஐயையோ என்பவை போன்றவை.

அச்சன் போலவே 'அத்தன்' என்பதும் தந்தையைக் குறிக்கும் பெயரே. "அத்தா! உன்னை யல்லால் இனி யாரை நினைக்கேனே" என்பது தேவாரம். அத்தன் என்னும் தந்தை பெயரே அவர் உடன் பிறந்தவளை 'அத்தை' என்று முறை சொல்ல வைத்ததாம். அத்தையின் மகனை 'அத்தான்', என்று அழைக்கவும் ஏவியதாம். அம்மையின் உடன்பிறந்தவனை 'அம்மான்' என அழைக்கும் வழக்கை அறிவோம் அல்லவோ! அந்த 'அம்மான் சேய்'தானே 'அம்மாஞ்சி' யாக விழிக்கிறான்!

குடும்பத் தலைவனாகிய அப்பன், ஐயன், அச்சன், அத்தன், தந்தை ஆகிய பெயர்கள் உலகத் தலைவனும் இறைவனைக் குறிப்பதாக வழங்குதல் உலகெல்லாம் தழுவிய ஒரு பெரு வழக்கமாம். பாடும் புலவன் அல்லது வழிபடும் அடியன் தன்னை மகன்மை முறையிலும். இறைவனைத் தந்தைமை முறையிலும் கொள்ளும் அடிப்படையில் வந்த வழக்கமே இஃதாம்.

'சுத்த சன்மார்க்க வேண்டுகோள்' பகுதியில் வள்ளலார் இறைவனை,

"அப்பா நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்"

"ஐயா நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்"

"அத்தா நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்"

"அச்சா நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்"

என்று தந்தையின் முறைப்பெயர்கள் நான்கை வழங்கியதுடன் 'அண்ணா நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்' என்றும்

வழங்கினர். சில குடும்பங்களில் அரிதாக அப்பாவை 'அண்ணு' என அழைக்கும் வழக்கையும் கருதலாம்.

தந்தை என்பது படர்க்கைப் பெயர். தாய் என்பது போல, அவர் அப்பா என்னும் பொருள்தருவதாம்.

என் தந்தையும், எம் தந்தையும் எந்தையாம்;

நின் தந்தையும் நும் தந்தையும் நுந்தையாம்;

நின் என்பது நுன் எனவும் உன் எனவும் வழங்கும்.

நும் என்பது உம் எனவும் வழங்கும். ஆதலால் உன் தந்தையும் உம் தந்தையும் உந்தையாம்.

உம் எம் என்பனவும், தம் நம் என்பனவும் உங்கள் எங்கள் தங்கள் நங்கள் என வருதல் பன்மைமேல் பன்மையாகிய சிறப்புப் பன்மையாம்.

அப்பாவுக்கு முன் பிறந்தவரும் அம்மாவுக்கு மூத்த பெண்களை மணங்கொண்டவரும் பெரியப்பா, பெரிய ஐயா என வழங்கப் படுதலும், அப்பாவுக்குப் பின் பிறந்தவரும், அம்மாவுக்குப்பின் பிறந்த பெண்களை மணங்கொண்டவரும் சிற்றப்பா, சின்னையா என வழங்கப் படுதலும் எவரும் அறிந்த செய்தி.

சிற்றப்பாவை நல்லப்பன் என்பதும் உண்டு. அவரைக் 'குட்டியப்பா' என்பதும் இளமை கருதிய பெயரே. குட்டிச் சாக்கு, குட்டிப் பை, குட்டிப் பாலர் வகுப்பு என்னும் வழக்குகளால் குட்டிக் குரிய 'சிறியது' என்னும் பொருள் விளக்கமாம்.

———

'செந்தமிழ்ச் செல்வி' உறுப்பினர்கட்கு

இவ்வாண்டு ஆடித் திங்களோடு 'செந்தமிழ்ச் செல்வி' யின் 58ஆவது சிலம்பு முடிவுற்று, அடுத்துவரும் ஆவணி யிலிருந்து 59ஆவது சிலம்பு தொடர்கிறது. அன்பர்கள் தொடர்ந்து உறுப்பினராகித் தமது ஆதரவினை நல்கு மூகத்தான் அடுத்த ஆண்டுக்குரிய கையொப்பத் தொகை யினை (ரூ. 20-00) உடனடியாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இன்றேல் அடுத்த இதழினை விலைபெறு அஞ்சலில் (V. P. P.) அனுப்ப வேண்டியிருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

—ஆசிரியர்

ஆட்சிமொழிச் சிந்தனைகள்

[தமிழ்த்தொண்டர் கோ. முத்துப்பிள்ளை
மாக்கவி பாரதி நகர், சென்னை-600 039.]

SCHEME

முனைவர், கவிஞர் ஏர்வாடி எஸ். இராதாகிருட்டிணன் அவர்கள் ஒரு மின்னல்வேக இளைஞர். சிறந்த கவிஞர், சிறந்த சிறுகதை ஆசிரியர், சிறந்த நாடக ஆசிரியர் என்னும் இவற்றோடு மட்டுமல்லாமல், அவர் ஒரு சிறந்த சொல்லாக்கக் கலைஞரும் ஆவார். பதினைந்தாயிரம் வங்கிக் கலைச்சொற்களைத் திரட்டித் தொகுத்துச் செம்மைப்படுத்திய அப்பெருமகனுக்கு, அவை அச்சிற்குப் போகுமுன்னர் ஆய்ந்துபார்த்து உறுதியளிக்க, பதினைந்து அறிஞர்களைக்கொண்ட வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழுவில் ஓர் உறுப்பினராக அமைந்து, இரண்டு திங்கள் வரை அவரோடு வங்கியில் தங்கிப் பணிபுரியும் அரிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

பல்லாண்டுகளாகத் தொல்லை கொடுத்துவரும் சொற்களை யெல்லாம் தனியே இனங்கண்டு அவற்றைச் செப்பனிட்டுவந்தார் அவர். இடையிடையே அவற்றை என்னிடம் கொடுத்து வேடிக்கை பார்ப்பது அவரது வாடிக்கையாகவும் இருந்தது. எவற்றை அவர் என்னிடம் கேட்காமலிருந்தால் நலமாயிருக்கும் என்று நான் எண்ணிக்கொண்டிருந்தேனோ, சொல்லிவைத்தாற்போல, அவற்றை மட்டுமே அழகிய வினாக்களாகத் தொடுப்பார் அவர். அவற்றுள் ஒன்றுதான் Scheme, Plan, Project, Programme என்னும் பட்டியல்.

மொழிபெயர்ப்புகளைப்பற்றி எங்குப் பேசப்பட்டாலும் அங்கெல்லாம் இந்தப் பட்டியல் தலைகாட்டும்! ஆராய்ச்சிக் கருத்தரங்குகளிலே தவறாது இடர்கூட்டும்! தாளிகைகளுக்கோ இஃது ஒரு கேளிக்கை மொழி! பகடி செய்வார்க்கோ இஃது ஒரு பாடநூல்!

தமிழிலே சொல்லமுடியவில்லை என்று சொல்வதிலே சிலருக்கு இன்றுகூட ஒரு தனி மகிழ்ச்சி ஏற்படத்தான் செய்கின்றது! 1968ஆம் ஆண்டு இரண்டாவது உலகத்தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்றபோது, மொழிபெயர்ப்புக் கலை குறித்து, அம்மையார் ஒருவர் ஆய்வுக் கட்டுரை படித்தார். அப்போது அவர், இந்த நான்கு சொற்களுக்கும் "திட்டம்" என்னும் ஒரே சொல்லை நாம்

பயன்படுத்திவருகின்றோமே என்று நொந்துகொண்டார்! மூன்று ஆண்டுகளுக்கு முன்னர், "இந்து" தாளிகையில் இனிய நண்பர் ஒருவர் மடல் வரைந்திருந்தார்! அவரும் இதைப்பற்றியே மன வருத்தம் அடைந்தார்! மிகமிக அண்மையிலே என்னுடைய உறவினர் ஒருவர், ஏதேதோ பேசிவிட்டுக் கடைசியில் ஒரு சிறிய நறுக்கினை என்னிடம் மறைவாகக் கொடுத்துச்சென்றார்! பிரித்துப் பார்த்தால் அதே பட்டியல்! இவற்றிற்கெல்லாம் ஒரு முடிவு காண வேண்டுமென்பதே முனைவர் ஏர்வாடி அவர்களின் பெரு விருப்பமாகும்.

ஆய்வுசெய்து பார்க்குமுன்னர், சிறிய வினாவொன்றை எழுப்ப விரும்புகின்றேன். நான்கு ஆங்கிலச் சொற்களுக்குமே ஒரேவொரு மொழிபெயர்ப்பைப் பயன்படுத்தினால்தான் என்ன? திட்டம் ஒன்றை வரைந்து அனுப்புக—இதுதான் Scheme. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு எங்நிலையில் உள்ளது—இதுதான் Plan. நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டத்தால் நாம் அடையும் பயன்களை விவரித்துக் கூறுக—இதுதான் Project. அடுத்த ஆண்டிற்கான திட்டங்கள் யாவை—இதுதான் Programme, ஒரு தொல்லையும் தெரியவில்லையே. "திட்டம்" என்ற ஒரே சொல் ஒய்யாரமாக உலாவருகின்றதே! எனினும் சிலர் இந்த நான்கு ஆங்கிலச் சொற்களுக்குமிடையே நுட்பமான சிறுசிறு வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன என்று இயம்பி மகிழ்வர்!

சமையற் கலையைப்பற்றி எண்ணற்ற நூல்கள் எங்கும் கிடைக்கின்றன. "சமையல்" என்னும் நறுந்தமிழ்ச் சொல் எத்தனை நல்ல கருத்துகளையெல்லாம் நமக்கு வாரிவழங்குகின்றது. அகத்திலே, ஆம் நமது இல்லத்திலே, செய்யப்படுவது சமையல் இன்னொரு அகம் இருக்கிறது. அதுதான் அலுவல் + அகம். இந்த அகத்திலே சமைக்கப்படுவதுதான் திட்டம்! துறைத் தலைவர் தாமாக விரும்பி, ஒரு திட்டத்தை அனுப்புவார், அல்லது அரசு, தானே அதனை, அவரிடமிருந்து கேட்டுப் பெறும். அதன்பின்னர் அந்தத் திட்டம் தொடர்புடைய தலைமைச் செயலகத் துறைகளால் ஆராயப்பெறும், அல்லது நம்முடைய மொழியிலே, அது சமைக்கப்பெறும். திட்டங்களின் ஆய்வில் பல கட்டங்கள் இருக்கின்றன. அவை ஈண்டு நமக்குத் தேவையில்லை. எனினும் சமைக்கப்படும் ஒன்றுதான் Scheme என்று தெரிந்துகொள்கிறோம்.

புதிய வீடுகள் புறநகர் எங்கும் எழிலாக எழுந்தோங்குகின்றன. புதிய வீடு கட்டுவதற்குப் Plans மற்றும் Estimates தேவை என்கிறோம். Plans என்பதை அமைப்புப் படங்கள் என்றும் Estimates என்பதை மதிப்பீடுகள் என்றும் ஏற்கெனவே மொழி

பெயர்த்துள்ளோம். "அமைப்புப் படங்கள்" என்னும் தொடரிலே உள்ள "அமைப்பு" என்னும் சொல் மிகவும் முக்கியமானதாகும். பிறரை நாம் திட்டும்போதுகூட திட்டம் என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறோம்! "இது திட்டமிட்ட செயல்" என்று கடிந்து பேசுகின்றோம். இவ்வாறு கூறும்போது "இது ஏற்கெனவே மனத்தில் அமைக்கப்பட்டுவிட்ட செயல்" என்னும் கருத்து தெளிவாகத் தெரிகின்றது. சமைக்கப்பட்ட திட்டம் பிறகு வரிசைப்படுத்தப் பெறுகின்றது அல்லது அமைக்கப்பெறுகின்றது அமைக்கப்படும் திட்டம், அமைத்த திட்டம், அமைக்கவிருக்கும் திட்டம் Plan ஆகும்.

பல திட்டங்கள் பல சமயங்களில் உறங்கிப்போகும்! உறங்காது, உயிர்த்துடிப்புடன் செயற்பட்டுவரும் திட்டந்தான் Project. பூவாகிப் பிஞ்சாகிக் காயாகிக் கனியாகி அல்லது முழு உருவாகி, அதன்பின்னர் மீண்டும் அந்த நிலைகளையெல்லாம் பெற்றுச் சுழன்றுகொண்டேயிருப்பதுதான் Project. மின் திட்டங்களையெல்லாம் கண்முன் கொண்டுவந்து பார்த்தால், இது நன்கு புலனாகும். ஆம், Project என்பது ஆகிவரும் திட்டம்.

Scheme, Plan, Project என்னும் மூன்று முடிச்சுகள்! அவற்றின் சிறப்பினை உணர்ந்து சீர்செய்துவிட்டோம். இனி, எஞ்சியுள்ள நான்காவது சொல்லை "முடிச்சு" என்று சொல்லுதல் சரியன்று "இனிமையான முடிவு" என்றே சொல்ல வேண்டும். Programme என்பதற்குப் பொருள் நன்றாகவே புரிகின்றது. திட்டங்களைச் சட்டங்களுக்குள் அடைத்துவிடாமல், செயல்திட்டங்கள் மலர்கின்றன. மயல் வடிவங்களெல்லாம் மாறி, செயல் வடிவம் கதிர் பரப்புகின்றது. ஆம். Programme புறப்பட்டுவிட்டது.

ஆங்கில விளக்கங்கள் மேற்சாணும் கருத்துகளை அடியொற்றி வருகின்றன. அவற்றை அடிக் குறிப்புகளாகத் தந்துள்ளேன்.

வங்கிக் கலைச் சொல்லாக்க வல்லுநர் குழுக் கூட்டத்திலே நான் செய்துள்ள மொழி பெயர்ப்புகளை அறிவித்தேன். அறிஞர்கள் ஆரவாரம் செய்தனர்! மகிழ்ச்சிப் பெருக்கால் துள்ளி விளையாடினர்! தலைமை வகித்த வங்கி அதிகாரி உயர்திரு. ஜி. சத்தியமூர்த்தி அவர்கள் சுவை சுவையாக இருப்பதாகப் (ஜிலு ஜிலுவென்று இருப்பதாகப்) பாராட்டினார். இனனொரு பெரிய அதிகாரி உயர்திரு. ஈ. ஜே. சௌந்தரராஜன் அவர்கள் நடனம் ஆடினார் என்று சொன்னாலும் தவறில்லை! "சமை திட்டம், சமை திட்டம்" என்பதுதான் அவருடைய ஆட்டத்தின் பாட்டு! உங்கள் கருத்துகள் எவ்வாறிருக்குமோ யானறியேன்! எனினும் எல்லாவற்றையும் சொல்லிவிடுகின்றேன்.

Scheme = சமை திட்டம்.

Plan = அமை திட்டம்.

Project = ஆகு திட்டம்.

Programme = செய் திட்டம்.

Scheme = a scheme of purposed action for achieving an end.

Plan = a scheme drawn up beforehand, a scheme of arrangement.

Project = projection, a scheme of something to be done.

Programme = a plan of things to be done.

———

சேக்கிழார் திருக்கோயில் திருப்பணி
ஒரு வேண்டுகோள்

செப்புதற்கரிய சைவக் காவியமாம் பெரியபுராணத்தை ஆக்கித் தந்த தெய்வத் தமிழ்ப்புலவர் சேக்கிழார் திருக்கோயில் இன்று குன்றத்தூரில் கேட்பாரின்றி, பராமரிப்பின்றி, விளக்கேற்றுதற்கும் வகையின்றிப் பொலிவிழந்து நிற்கும் நிலை சைவர்களுக்கு எட்டுணையும் பெருமையளிப்பதாய் இல்லை. இக் கோயில் இங்ஙனம் இருக்கப் பிற சைவாலயங்களில் சைவர்கள் விழா எடுப்பதும் உற்சவங்கள் நடத்துவதும் ஈன்றாள் பசித்திருக்க ஏனையோர்க்கு அன்னதானம் செய்வதற்குச் சமம்.

ஆகவே இத்திருப்பணியின் ஒவ்வோர் பகுதியை ஒவ்வொரு சைவ அமைப்பும் ஏற்றுக் கூட்டாக நின்று இத் திருப்பணியினை நிறைவேற்றிட முன்வருமாறு தமிழகத்திலும், பிற இடங்களிலும் உள்ள பல்வேறு சைவ அமைப்புகளை உள்ளன்போடு அழைக்கின்றேன். திருப்பணியில் பங்கேற்க முன்வரும் சைவ அமைப்புகள், சைவ வள்ளற் பெருமக்கள் அடியேனது தலைமையில் அமைந்துள்ள திருப்பணிக் குழுவினைச் செயலாளர், தெய்வச் சேக்கிழார் திருக்கோயில் திருப்பணிக்குழு, மனை எண்: 2, 11வது தெரு விரிவு, புதுக் குடியிருப்பு, ஆதம்பாக்கம், சென்னை-600088 என்ற முகவரியில் தொடர்புகொண்டு திருப்பணி கைந்நூலைப் பெற்றுத் தத்தம் பங்கினைப் பதிவு செய்துகொள்ள வேண்டுகிறேன்.

அன்பன்,

கிருபானந்தவாரி,

தலைவர், தெய்வச் சேக்கிழார்

திருக்கோயில் திருப்பணிக் குழு.

பழுதுபட நினையேல்

[டாக்டர். சொ. சிங்காரவேலன், எம். ஏ., பிஎச். டி.,
தமிழ்ப்பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மயிலாடுதுறை]

மனத்தின் நுண்மை :

வாழ்வு செயல்களால் முழுமை பெறுகின்றது; செயல்களோ சிந்தனையால் உருவாகின்றன; இடைநின்ற சொற்கள் சிந்தனையின் வழிப்பட்டுக் கருத்து விளக்கம் தரக் காரணம் ஆகின்றன. இவ்வாறு மனம், மொழி, மெய்களால் பிறப்பில் விளக்கம் உருவாகின்றது. மனிதன் மனத்தால் சிறந்தவன்; 'மனன் உணர்வு' ஆறும் அறிவு என்பது தமிழ் மரபு. அதனால் மனிதப்பிறப்பு செயல்களால் உயர்கின்றது என்போம். ஆயின், அச் செயல்களுக்கு முதனிலை 'சிந்தனை' ஆகிய மனத்தின் நுண்ணிலை என்பது தெளிவு. பைசந்தி, மத்திமை, சூக்குமை என்னும் மூவகைகளில் நுண்வாக்குகளை வகுக்கும் தத்துவவுலகு; புறத்தே இனிதிசைக்கும் சொல்லை 'வைகரி' என்று வகுக்கும். இதன் நுண்ணிலைகள்தாம் பிற மூன்றும். இதனால் வாக்கு நான்கு என்று வகுக்கும் சிவாகமநூல்.

''பொருளியல் நற் சொற்பதங்கள் ஆயினானை''

(அப்பர் : 6-33-7)

என்றவிடத்துக் கூறப்பட்டது 'வைகரி' யாகிய வாக்கின் வகையே என்பர் அறிஞர்.

மனத்தூய்மையின் மாண்பு :

மனத்தின் சிறப்பு மதிக்க ஒண்ணாதது. அதனைத் தூய்மையாகவும் தெளிவாகவும் வைத்துக்கொள்ளல் நம் கடன். மனத்தின் தூய்மையே அனைத்துத் தூய்மைகளுக்கும் அடிப்படை. மனத்தைக் குழப்பமும், அழுக்கும் உடையதாக வைத்துக்கொண்டு செய்யும் புறச்செயல்கள் அனைத்தும் பழுதுபட்டவையே; பயனற்றவையே. உள்ளத்தைப் பண்படுத்தி உயர்ந்த சான்றோர் உரைப்பன அனைத்தும் இதனை விளக்குவனவே. இன்று எத்துணை பேர்க்கு மனத்தூய்மை இருக்கிறது? இந்த வினாவிற்கு விடை எதிர்மறையாகவே இருக்கும். புறச்செயல்களால் நல்லோர் போல நடிக்கும் பலரை இவ்வுலகம் இன்று பெற்றிருக்கின்றது. உள்ளத்தே தீமைகளை ஓராயிரமாக மூடிக்கொண்டு புறத்தே பிறரை ஏமாற்றும் பலரைக் கண்டு திருவள்ளுவர் முதலிய சான்றோர் உளம்நைந்து பேசியவை அனைத்தும் அவர்தம் படைப்புகளிற் காணப்பெறுகின்றன.

''பொக்க மிக்கவர் பூவும் நீரும் கண்டு
நக்கு நிற்பன் அவர்தம்மை நாணியே'' (அப்பர் : 5-90-9)

என்று திருநாவுக்கரசர் பேசுதல் மறக்கவியலாதது. பொய்மை யாளர் பூசனை இறைவனாற் புறக்கணிக்கப்படும் என்பது அவ்வரு ளாளர் கணிப்பு.

"இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வறுத்துச் சோதியாய்—அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து"

(மாணிக்கவாசகர்: 8-திருவெண்பா 11)

என்பர் திருவாசகத்தும். இறைவன் உறையும் திருக்கோயில் இதயமே ஆதலின் அதனை இனிது பேணி அமைக்கும் திறம் இங்குப் பேசப்பட்டமை காணலாம். இத்தகைய தூய உள்ளமே இறைவன் உகக்கும் இடம் என்று எண்ணற்ற இடங்களில் திருமுறைகள் பேசும்.

தூய நினைவுடன் வாழ்க:

இந்த மனம்—அல்லது உள்ளம் குற்றப்படத் தக்க நினைவுகளை நாம் கொள்ளலாகாது. அந் நினைப்பினை இறையருள் தியானம் கொண்டு மாற்றிடுதல் வேண்டும். "உடம்பிற்குள் ஒரு விளக்கை ஏற்ற நான் முயல்கின்றேன்; ஆனால் அங்கே உள்ள ஐந்துபேர் அதனை ஏற்ற வொண்ணாது தடுக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபடுகின்றனர். அவர்களோ வலியவர்கள்; திருப்புகலூர்ப் பெருமானே ! செய்வதொன்று அறியமாட்டாதவன் ஆயினேன்" (அப்பர்: 4-54-9) என்ற அப்பர் அருண்மொழி ஓர்ந்துணரத் தக்கது. இறைவன் 'பொருள்சேர் புகழ்களை' எண்ணுவதால தீய நினைவுகள் தோன்றா. அப் பொருள்சேர் புகழ்கள் பற்றிய இடை யறாத சிந்தனையே. அதன்வழிப்பட்ட விழுமிய இனிய சொற்களைத் தோற்றுவிக்கும்; அறச்செயல்களை ஆற்றத் துணைபுரியும். இதனையே 'பழுதுபட நினையேல்' என்ற தொடர் இரத்தினச்சுருக்கமாக எடுத்துரைக்கின்றது.

செவியறிவுறூஉத் திறம் வாய்ந்த செம்மொழி:

"பழுதுபட நினையேல்" என்ற தொடர் ஆத்திசூடிவாசகம் போல் திட்ப நுட்பம் உடையதாக மிளிர்கின்றது. நினைக்கும் நெறி இது என்று அறிவுறுத்துவதாக அமைகின்றது. 'செவியறிவுறூஉ' வகையில் பொருள் பொதிந்த திருநாவுக்கரசர் தேவார அருந்தொடர்களுள் இஃதும் ஒன்றாகும். ஆறாம் திருமுறையில் வரும் பின்வரும் திருத்தாண்டகத்தில் இப் பொன்மொழித் தொடரைக் காண் கின்றோம்.

"எழுதுகொடியிடையார் ஏழை மென்றோள்
இளையார்கள் நம்மை இகழா முன்னம்
பழுதுபட நினையேல் பாவி நெஞ்சே
பண்டுதான் என்னோடு பகைதான் உண்டோ

முழுதுலகில் வானவர்கள் முற்றுங் கூடி
முடியால் உறவணங்கி முற்றம் பற்றி
அழுது திருவடிக்கே பூசைசெய்ய
இருக்கின்றான் ஊர்போலும் ஆரூர்தானே''
(அப்பர் : 6-25-2)

தாண்டக வேந்தரின் நுட்பங்கள் :

ஓவியத்தில் நுட்பமாக எழுதப்பட்ட பூங்கொடி போன்ற இடையை உடைய பெண்கள், இளைய பெண்கள் இகழ்வதற்கு முன்பாகவே, (அப் பெண்கள் அவ்வாறு இகழ்தற்குரிய காரணம் முதுமை) நினைப்பினைப் பயனின்றிக் கழித்துவிடாமல் ஆரூர் அமர்ந்த அண்ணலைப் போற்றுக என்பது இங்கு அடிகளார் அறிவுறுத்தும் பொருள். பாவத்தை உடைய மனம் என்பதாகத் தம் நெஞ்சத்தைச் சுட்டுவதே 'பாவி நெஞ்சே' என்ற விளி. திருவாரூரப் பெருமானை வழிபட்டு வானோர்கள் இன்புறுவதனைப் பாட்டின் பிற்பகுதியிற் கூறுகின்றார் அடிகளார். திருவாரூர்த் திருக்கோயில் முற்றத்தில் வானவர்கள் தூய அன்பினோடு வழிபாடு செய்கின்றனர். 'திருவடிக்கே அழுது பூசை செய்ய' என்ற தொடர் இதனைக் காட்டுவதாக அமைகின்றது. அழுதல் அன்பினால் நைந்து உருகுதல், 'அவர்கள் வாழ்வைப் பயனுடையதாக்குதல் போலும் உன் செயலும்' என்று உணர்த்துகின்றார். நீயும் அன்பினால் வழிபாடு செய்க; அவ்வாறு செய்தற்கேற்ற உள்ளமாக ஆகுக; அதற்கு நினைப்புத்தவிர வேறு நினைப்பு உனக்குத் தகாது. அவ்வாறின்றி வேறு வகையாக—உலகியல் நினைப்பாக உன் நினைப்பு அமையுமாயின் அது குற்றம் உடையது; (பழுது - குற்றம்) என்கின்றார் அடிகளார். 'பழுதுபட நினையேல்' என்ற சொற்கள் நினைப்பு அமைய வேண்டிய பாங்கினை எதிர்மறை வாய்பாட்டால் இயம்புவனவாக அமைகின்றன. பாவத்தை உடைய மனம் ஆதலின் பழுதுபட நினைவதே அதன் இயல்பு; அதனை மாற்றுவதே தம் கடன் என்பதாகக் கருதிப் 'பழுதுபட நினையேல் பாவி நெஞ்சே' என்று முன்னும் பின்னுமாக அத் தொடரை அமைத்திருக்கும் அழகு ஓர்ந்து உணரத்தக்கதாக உள்ளது. 'மனத்துக்கண் மாசு இலன் ஆதல்' என்று வள்ளுவரும் வகுப்பர்; அங்கு 'மாசு' என்று கூறப் பட்டதே இங்குப் 'பழுது' எனக் கூறப்படுகின்றது என்பது நுணணிதின் உணர்வார்க்கு விளங்கும் அரும்பொருள்.

பொய், குறளை, கடுஞ்சொல், இன்னாச்சொல் என்பன வாக்கின்கண் நிகழும் பாவங்கள் என்பர். அவை பழுதுபட்ட மனத்தினின்றும் விளைவன. மெய், இனியசொல் முதலியன பழுதற்ற மனத்துப் படர்வன. தம் நெஞ்சை வாய்மையின் வழிப் படர்வதாகப் பழக்கிக்கொண்டால் அதன் வழியே நல்லன எல்லாம் படியும்; நன்றாற்றல் விளையும்.

திருமுறை ஆணை மந்திரங்கள் :

சிலவாய சொற்களில் பல்வேறு அரும்பொருள்களை இவ்வாறு செறித்துக் கூறும் மறைமொழிகளே நம் திருமுறைகள்; 'நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழிகளே இம் மந்திரங்கள்' என்று தொல்காப்பிய நெறியில் துணியலாம். 'முதுமை வரு முன்னே வாழ்வைப் பயனுடையதாக்கிட வேண்டும்' என்பது எவ்வளவு அழகிய ஆணை! முதுமை வந்துவிடிலோ 'குந்தி நடந்து குனிந்தொருகை கோலூன்றி, நொந்திருமி ஏங்கி நுரைத்தேறி, வந்துந்தி ஐயாறு வாயாறு பாயும்' அவலநிலை அல்லவா வந்து விடும்! அதற்கு முன்னேயே நினைவு, சொல், செயல்களால் விழுமிய நிலை தலைப்பட வேண்டும் என்பது அருளாளர் கருத்து. யாக்கை நிலையாமை பற்றிய அருளாளர் கருத்துகளை இவ்வாறு நுட்பமாக ஓர்ந்துணராவிடில் அவற்றின் அருமை புலனாகாது.

"அரிச்சுற்ற வினையாலடர்ப்புண்டு நீர்
எரிச்சுற்றக் கிடந்தாரென் றயலவர்
சிரிச்சுற்றுப் பலபேசப்படா முனம்
திருச்சிற்றம்பலம் சென்றடைந் துய்மினே"

(அப்பர் : 5-1-3)

என்பன போன்ற திருமுறை மந்திரங்கள் இந்நெறியிற் பொருள் கொள்ளற்குரியவை.

மாமருந்துத் திறம் :

மனமோ நிலையில்லாதது; அதில் தோன்றும் நினைவுகளோ பலப்பல. 'உறுகயிறூசல் போல ஒன்றுவிட்டு ஒன்றுபற்றி மறு கயிறூசல் போல வந்து வந்து உலவும் நெஞ்சம்' (அப்பர் : 4-26-6) என்ற உவமைதான் எவ்வளவு அழகாக இதனை விளக்கி விடுகின்றது! கயிற்றால் கட்டப்பட்ட ஊஞ்சல் ஒன்று மேலும் கீழுமாக ஆடும்போது இப்பக்கமும் அப்பக்கமுமாகச் சென்று வருதல் போல மனத்தின் நினைவுகளும் மாறிமாறி அமைகின்றன என்ற விளக்கம் நுட்பமானது. இறைவன்பற்றிய இனிய நினைவாக மனம் நினைக்கத் தொடங்கிவிட்டால், அதுவே பயன் உடைய நினைவு. வாழ்வின் குறிக்கோளை வழுவாது அமைக்கும் இனிய நினைவு. அதனைச் சூத்திர யாப்பில் செவியறிவுறூஉவாகச் சொல்வதே "பழுதுபட நினையேல்" என்ற தாண்டகத் தொடர்.

பல்வேறு நினைவுகளிற் சிக்கித் தம் வாழ்வைப் பயனின்றிக் கழிக்கும் மாந்தர்க்கு உய்யும் நெறி காட்டும் ஓரழகிய மாமருந்தே 'பழுதுபட நினையேல் என்ற தொடராக விளங்குகின்றது. அம்மருந்தை வழங்கிய திருவருள் மருத்துவரே திருநாவுக்கரசர், அம் மருந்தினை உணர்ந்து, நெறிநின்று, பயன்பட வாழ்வதே தமிழ்மக்கள் கடன்.

———

சங்க நூல்களில் நாகமும் வழையும்

[பி. எல். சாமி, இ. ஆ. ப. (ஓய்வு)]

நாகம் :

''கோட்டெங்கின் குலைவாழைக்
கொழுங்காந்தண் மலர் நாகத்து''
—பொருநராற்றுப்படை 208-209

''பெருங்க ளுடன் பேகனுஞ் சுரும்புண
நறுவீ யுறைக்கு நாக நெடுவழி''
—சிறுபாணாற்றுப்படை 287-88

''நளிமலை நாட னள்ளியு நளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த
—சிறுபாணாற்றுப்படை 107-108

''ஒருதான் ருங்கிய வுரனுடை நோன்ருள்
நறுவீ நாகமு மகிலு மாரமும்''
– சிறுபாணாற்றுப்படை 115-116

''ஆரங் காழ்வை கடியிரும் புன்னை
நரந்த நாக நள்ளிரு ணாறி'' —குறிஞ்சிப்பாட்டு 93-94

''நாகந் திலக நறுங்கா ழாரம்
கருங்கொடி மிளகின் காய்த்துணர்ப் பசுங்கறி''
—மலைபடுகடாம் 520-521

''போகிய நாகப் போக்கருங் கவலை'' —நற்றிணை 82

''ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமல ருதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்''
—திருமுருகாற்றுப்படை 301-303

''வரையன புன்னாகமும்
கரையன சுரபுன்னையும்'' —பரிபாடல் 11 : 16-17

''தளிபொழி சாரற் றதர்மலர் தாஅய்
ஒளிதிக ழுத்தி யுருகெழு நாகம்
அகரு வழைஞெமை யார மிணையத்''
—பரிபாடல் 12 : 3 5

"முல்லை வகுளங் குருக்கத்தி பாதிரி
நல்லிணர் நாக நறவஞ் சுரபுன்னை
எல்லாங் கமழு மிருசார் கரைகலிழத்"
—பரிபாடல் 12 : 79-81

"நனைசினையின நறுவிரையன நலனுடைய நாகம்"
—நீலகேசி-அரசன் சிறப்பு 16

"நீனாக நறுந்தண்டார் தயங்கப்பாய்ந் தருளினாற்"
—கலித்தொகை 39

"நாக நாறு நரந்தை நிரந்தன" —சிலப்பதிகாரம் 15-18

"குரவமும் வகுளமுங் கோங்கமும் வேங்கையு
மரசமு நாகமுந் திலகமு மருதமும்"
—சிலப்பதிகாரம் 13 : 151-152

"நாகந் திலக நறுங்கா மூரம்" —சிலப்பதிகாரம் 15-18

"நரந்தமும் நாகமும் பரந்தலர் புன்னையும்"
—மணிமேகலை 3-162

"..............................புதனாக
பொன்பயந்த வெள்ளிபுறமாகப் பூங்கோதாய்"
—திணைமாலை நூற்றைம்பது 117

சங்க நூல்களில் நாகம் என்ற மரம் சில பாடல்களில் கூறப்பட்டுள்ளது. நாகம் என்ற பெயர் அரிதாக இந்த மரத்திற்கு இன்றும் வழங்குவதால் இதைக் கண்டுகொள்வது எளிதேயாகும். முதலில் கவனிக்கப்பட வேண்டியது இதன் பூவாகும். இது அரிய நறுமண முடையது. நறுவீயுறைக்கும் நாகம், நறும்போது கஞலிய நாகு முதிர் நாகம், நாக நறுமலர், நறுவிரையன நாகம், நாகம் நாறும் என்றெல்லாம் இதன் பூ சங்க நூல்களில் குறிப்பிடப்படுவதால் இந்த மரத்தைக் கண்டுகொள்வது எளிதாக உள்ளது. இதன் மகரந்தத் தூள்களை "நாககேசரம்" (Nagkesr) என்று நறுமணமூட்டும் பொருளாகக் கடைகளில் விற்கப்படுகிறது. நீலகேசியில் 'நறு விரையன' என்பதை இது சார்பாகக் கவனிக்கவேண்டும்.

சீவகசிந்தாமணியில் நாக மரத்தைப்பற்றிச் சில செய்திகள் கூறப்பட்டுள்ளன.

"மழைதவழ் சோலை மலைமிசை நீண்ட
குழைதவழ் குங்குமங் கோழரை நாகம்"
—சீவகசிந்தாமணி 524

"மணிமலர் நாகஞ் சார்ந்து வழையொடு மரவநீழற்"
—சீவகசிந்தாமணி 1569

"மரவ நாக மணங்கமழ் சண்பகம்
குரவங் கோங்கங் குடம்புரை காய்வழை"
—சீவகசிந்தாமணி 1918

"நாகத் தல்லியும் ஏலத் திணரும்"
—பெருங்கதை-நருமதை கடந்தது 24

"நாகத் தல்லியு நயந்ததக் கோலமும்"
—பெருங்கதை-இரவெழுந்தது 132

நாகத்தல்லி அதன் நறுமணமுடைய கேசரத்தையே குறிக்கும். சீவகசிந்தாமணி உரையிலேயே சில பாடல்களில் சுரபுன்னை என்றும் 1608ஆம் பாடலில் சுரபுன்னையன்று என்றும் கூறப்பட்டுள்ளதைக் கவனிக்கவேண்டும். நாகம் சுரபுன்னையன்று. வழையே சுரபுன்னை யாக இருக்க முடியும். வழைக்கும் சுரபுன்னை என்று பொருள் கூறி யிருப்பதைக் காணலாம். நாகம் பெரிய வெள்ளைப் பூக்களை உடையது. இதன் நறுமணமிக்க பூவிற்காக மலையாளத்திலும் ஜாவாவிலும் இந்த மரத்தை வளர்க்கிறார்கள். பூவைக் காயவைத்துச் சந்தனம் முதலிய நறுமணப் பொருட்களுடன் பயன்படுத்துவர். (When dried they are mixed with other aromatics such as white sandal wood and used for perfumming ointment). பர்மாவில் தலையணையில் நாகமலரின் காய்ந்த மகரந்தத் தாள்களை நறுமணத்திற்காக அடைத்துப் பயன்படுத்துகிறார்கள். இதன் பொன்போன்ற மகரந்தத் தாள்களையும் வெள்ளி போன்ற வெள்ளைப் பூங்கோதையையும் திணைமாலை நூற்றைம்பது கூறியதைக் கவனிக்க வேண்டும்.

இம் மரத்தின் இலை அழகாக இருக்கும். மேற்பக்கம் பளபள வென்று இருக்கும். The glossy leaf green above, glorious white below and the large white flowers are very pleasing. நாகம் பசுங்காடுகளில் வளர்கின்றது. கூட்டம் கூட்டமாகக் காணப் படும். 'In these forests it often forms consociations which may cover a considerable area'. என்று கூறப்பட்டுள்ளதை இது சார்பாகக் கவனிக்கவேண்டும். (Manual of Forest Botany —N. L. Bor (O. U. P.) இதையே "போகிய நாகம் போக்கருங் கவலை" என்று நற்றிணை (82) கூறியுள்ளது. "நறுவீ யுறைக்கும் நாக நெடுவழி" என்று சிறுபாணாற்றுப்படை கூறியுள்ளது. இயற் கையில் கூட்டமாகக் காணப்படும் என்பதையே இது குறிக்கின்றது. போகிய என்ற சொல் இவ்விடத்தில் நெடுமை என்ற பொருளில் கூறப்பட்டுள்ளது.

"வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்
நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள" (தொல். 800)

என்று வரும் தொல்காப்பியச் சூத்திரத்தில் போகல் என்ற சொல் நெடுமை என்ற பொருளில் வருவது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ''வெள்வேல் விடத்தேரொடு காருடை போகி'' என்ற பாடல் வரியையும் சேனாவரையர் எடுத்துக் காட்டியுள்ளார். மலைக்காடுகளில் நாக மரங்களே ஒரே இனமாக, சூழலாக நெடுந்தொலைவு காணப்படுவதையே கூறியுள்ளனர். போகும் வழியெல்லாம் எளிதில் போக முடியாதபடி அடர்ந்து நாகமரம் இருந்த கவர்த்த சூழலையே ''போகிய நாகம் போக்கருங் கவலை'' என்ற வரி குறிப்பிட்டுள்ளது. இந்த மரத்தைப் பிற நறுமணமுடைய மரத்தொடு, செடியொடு கூறுவது வழக்கம். நாகம், நறவம், நாக நாறு நரந்தை, நரந்தை, நரந்தமும், நாகமும், நாகந்திலகம், நாகமும் அகிலும் என்று கூறப்பட்டுள்ளதைக் காணலாம். நாகமரம் உயர்ந்த காடுகளில் வளரும் என்பதைத் திருமுருகாற்றுப்படை கூறியுள்ளது. ஊகக்குரங்கும் முசுக்குரங்கும் உயர்ந்த காடுகளில் வாழ்கின்றன. இந்தச் சூழ்நிலையிலேயே நாகம் கூறப்பட்டுள்ளதைக் கவனிக்கவேண்டும்.

நாகம் என்ற சொல்லுக்குச் சுரபுன்னை என்று சில உரையாசிரியர்கள் பொருள் கூறியுள்ளனர். அது தவறு. பரிபாடல் 110 பாட்டில் சுரபுன்னை என்று தனியாகக் கூறப்பட்டுள்ளது. சங்க நூல்களில் சுரபுன்னை என்ற பெயர் அப்படியே கூறப்படவில்லை. பரிபாடலில் மட்டும்தான் வருகின்றது. அதுபோல் புன்னாகம் என்ற மரமும் சங்க நூல்களில் குறிப்பிடப்படவில்லை. சுரபுன்னை, புன்னையும் நாகமும் போன்று இருத்தலால் புன்னாகம் என்று அம் மரம் அழைக்கப்பட்டது. இது காடுகளில் காணப்படும் Calophyllum tomentosa என்ற மரமாகவே இருக்கலாம். இந்த மரம் மிக உயரமாக வளரக் கூடியது. இந்த மரத்தை அராபியர் கப்பல்களில் பாய்மரமாகப் பயன்படுத்தினர். இந்த மரத்தின் வணிகப் பெயர் Poon என்பதாகும். இச் சொல் தமிழ்ப்பெயர் என்பது குறிப்பிடத் தக்கது. நாகமரத்தை இதன் அழகிற்காகவும் நறுமணப் பூவிற்காகவும் வீடுகளிலும் வளர்ப்பர். நாக மரத்தை Mesua Ferrea என்று அறிவியலில் அழைப்பர்.

வழை :

சங்க நூல்களில் வழை என்றொரு மரம் கூறப்பட்டுள்ளது. இதனை உரையாசிரியர்கள் சுரபுன்னை என்றழைப்பர்.

''கேழ லட்ட பேழ்வாய் ஏற்றை
பலாவம லடுக்கம் புலர வீர்க்குங்
கழைநரல் சிலம்பி னுங்கண் வழையொடு
வாழை யோங்கிய தாழ்கண் ணசும்பிற்''

—அகம். 8 (6-9)

"தேங்கமழ் வெறிமலர் பெய்ம்மார் காண்பின்
கழையமல் சிலம்பின் வழைதலை வாடக்
கதிர்கதங் கற்ற வேக னெறியிடை" —அகம். 177 (6-8)

"வழையம லடுக்கத்து வலனேர்பு வயிரியர்
முழவதிர்ந் தன்ன முழக்கத் தேறே
டுரவுப்பெயல் பொழிந்த நள்ளென் யாமத்"
—அகம். 328 (1-3)

"வழைவளர் சாரல் வருடை நன்மான்
குழவி வளர்ப்பவர் போலப் பாராட்டி" —கலி. 50

"வறனுற லறியா வழையமை நறுஞ்சாரல்
விறன்மலை வியலறை வீழ்பிடி யுழையதா" —கலி. 53

"கழைவளர் நெல்லி னரியுலை யூழ்த்து
வழையமை சாரல் கமழத் துழைஇ"
—மலைபடுகடாம் 180-181

"கோடல் கைதை கொங்குமுதிர் நறுவழை"
—குறிஞ்சிப்பாட்டு-83

"வழையமல் வியன்காடு சிலம்பப் பிளிறும்
மழைபெயன் மாறிய கழைதிரங் கத்தம்"
—பதிற்றுப்பத்து 41 : 13-14

"ஒளிதிக ழுத்தி, யுருகெழு நாகம்
அகரு வழைஞெமை யார மிணையத்"
—பரிபாடல் 12 : 4-5

"கழைவளர் சிலம்பின் வழையொடு நீடி
ஆசினிக் கவினிய பலவி ஞர்வுற்று"
—புறம். 158 : 21-22

"மண்ணெடுத் துண்ணு மண்ணல் யானை
வண்டேர்த் தொண்டையர் வழையம லடுக்கத்து"
—குறுந்தொகை-260

உரையாசிரியர்கள் சுரபுன்னை என்று பொருள் கூறியிருப்பதால் இந்த மரம் எதுவென்று கண்டுகொள்ள முடிகின்றது. சங்க நூல்களில் மலைகளிலும் மலைச்சாரல்களிலும் இந்த மரம் கூறப்பட்டுள்ளது. வழையமை சாரல், வழையமல் அடுக்கம் என்ற வர்ணனையால் இந்த மரம் குறிஞ்சியில் இருப்பதாகத் தெரிகின்றது. இந்த மரம் Evergreen forests என்ற பச்சிலைக் காடுகளில் வளர்கின்றது. 'வறனுறலறியா வழையமை நறுஞ்சாரல்' என்று கலித்தொகை கூறுவதைக் கவனிக்க வேண்டும். இந்த மரம் வாழும் சூழ்நிலையில் வறட்சியே இருக்காது என்று கூறப்பட்டுள்ளது. கலித்தொகை 50ஆம் பாட்டில் வருடை எனப்படும் வரையாடு வாழும் உச்சியில்

வழை மரம் காணப்பட்டதாகக் கூறியதும் கவனிக்கத்தக்கதாகும். ஒரே ஒரு பாட்டில் மட்டும் குறிஞ்சி திரிந்த பாலையில் வழை கூறப் பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பாலை என்பது பாலைவனம் அன்று. முல்லையும் குறிஞ்சியும் கொண்டுள்ள காடுகள் கடுங்கோடை வறட்சியால் பாலை போன்று மாறும். சென்ற ஆண்டு நீலகிரியில் உள்ள முதுமலைக் காடுகள் கடும் வறட்சியினால் நீரற்றுப் பாலை போன்று ஆயின.

"மாவங் கோங்கங் குடப்புரை காய்வழை" (1912)

என்று சீவக சிந்தாமணிப் பாடல் கூறுவதால் வழைக்கு, குடத்தை ஒத்த காய் உண்டு என்று கருத வேண்டியுள்ளது. இங்கு வழை யென்பதற்குச் சுரபுன்னையென்றே பொருள் கூறப்பட்டதையும் கவனிக்க வேண்டும்.

வழை மலைக் காடுகளில் (பச்சிலைக் காடுகளில்) Evergreen forests வளரும் மரமாகும். குறிஞ்சிப்பாட்டில் கொடங் என்ற காந்தளையும் கைதை என்ற தாழையையும் சேர்த்து வழையையும் கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும். கடற்கரையில் காணப்படும் தாழையுடன் வழை காணப்படாது. இதை திணைமயக்கம் என்றும் விளக்கமுடியாது. குறிஞ்சிப்பாட்டு ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ்நாட்டில் உள்ள மரஞ் செடி கொடிகளின் பெயர்களைப் புரிந்து கொள்ள எழுதப்பட்டதாகும்.

உயர்ந்த பச்சிலை மலைக்காடுகளில் காணப்படும் இம் மரத்தை அறிவியலில் Ochrocarpus longifolius என்றழைப்பர். மேற்குத் தொடர்ச்சி மலையில் எளிதாகக் காணப்படும். இதை இக் காலத் தில் சுரபுன்னை என்றழைப்பர். வழையே சுரபுன்னையாகும். நாகத்தைச் சில உரையாசிரியர்கள் கூறியிருப்பினும் அது தவறு. நிகண்டுகளில் வழை மரத்தையேதான் சுரபுன்னை என்று கூறியிருப் பது கவனிக்கத்தக்கது. ஆதலின் வழையே சுரபுன்னை என்பதில் ஐயமில்லை. கடற்கரையில் காணப்படும் புன்னைபோல சுரத்தில் காணப்பட்ட மரத்தைச் சுரபுன்னை என்று பிற்காலத்தில் அழைத் தனர். இது கடற்கரையில் வாழும் புன்னையினத்தைச் சேர்ந்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ஆதலின் தமிழில் கடற்புன்னையி லிருந்து வேறுபடுத்த 'சுரபுன்னை' என்று இம் மரத்தை அழைத்தனர்.

மேற்கோள் நூல்கள் :

1. A Manual of Indian Forest Botany N. L. Bor (O. U. P.)
2. The Useful Plant of India C. H. Drury.
3. Flora of the Presidency of Madras, J. P. Ganble.

எண்மர் எண்மணி மாலை

[மருத்துவர் மறையரசன்]

(முன் இதழ் சாஉஎ ஆம் பக்கத் தொடர்ச்சி)

2.1. வீரமாமுனிவர் :

(வெண்பா)

ஊர்தந்த கான்சுடான்சி யூசுசோசப் பின்னெட்டாம்
சீர்முன் பெசுகிவீர மாமுனியாய்ப்—பேர்மாறிச்
செந்தமிழை மேலேற்றுஞ் செம்மைசெய் தோயுனைப்போல்
எந்தமிழர் வீறுபெறல் என்று?

2.2. பரிதிமாற் கலைஞர் :

என்றும் எதிலும் தமிழே என்போய்
மன்றிற் புகழைத் தென்றலாய் வைப்போய்
உருபா வதியாய் நாடகங் கண்டோய்
தருவாய் கலாவதி தகையொடு தைப்போய்

நாடகத் தமிழ்க்கே நன்னிலை தந்துன்
ஊடக ஆவி உடலுந் தமிழாய்
ஆக்கித் திளைத்த ஐயா என்றன்
நாக்கில் வந்திடும் சாக்கில் அமிழ்தாம்

தமிழைப் பொழிதல் தகுமெனச் சாற்றி
அமிழ்தத் தமிழ்ப்பே ராசா னாக
ஆண்டு வந்த ஐயா நீயே
மாண்ட பழம்புகழ் மீண்டெழ மாற்றித்
தந்தோய் உன்னின ஆரியர் வேகச்
செந்தேன் வடிப்பாய் தீருமெம் நோயே!

2.3. மறைமலையடிகள் :

நோயாலே நொந்தனை தீர்த்தவன் மேற்கோவை நூற்றவனே!
தீயாலே நொந்தபோல் தீந்தமிழ் ஆரியத் தீயுழல
வாயாலே செய்கையால் வாட்டிய வன்பிணி வாகையிட்டெம்
தாயானேய் நோயுனைத் தாக்கிட நூல்பெறத் தான் பணியும்.

2.4. பாவேந்தர் :

பணியாதவர் துணிவானவர் பெரியாரவர் படையில்
அணியாய்முதல் வரிசைக்கொடி அடுத்தேவரும் நடையாய்
மணியாயவர்க் கருத்தேநிறை மறப்பாவியம் தேர்ந்தும்
தணியாவுள வேட்கைகொளும் தகைசால்தமிழ் ஏந்தி.

2.5. பாவாணர் :

ஏந்திய கல்வி யோடும் இணையிலா அறிவி னேடும்
மாந்திய மொழிகள் கண்ட மாண்பொடும் ஆய்வி னேடும்
போந்தனை வீர வாளால் புரைகளை வெட்டி வீழ்த்தி
ஈந்தனை தேவ நேய இன்தமிழ் இனிம றைமோ?

2.6. வ. சுப்பையா (பிள்ளை) :

மறைமலை நூலகத்தை மாண்பொடு காத்த
இறைநீயே என்றால் பிழையோ?—குறைவின்றித்
தாயுளாய் நூலகந் தாங்கினை பெற்றவீ
ராயிரம் நூல்கள் ஆமோர்க்
கோயிலாய்க் கொண்டு கூத்திட லாகுமே.

2.7. குடந்தைப் பண்ணாய்வாளர் :

ஆகும் எனஉயிரின் இறுதி — வரையில்
ஆக்கிப் படைக்குமுள உறுதி—கொண்டு
ஏகும் சுந்தரேசப் பரிதி—எங்கும்
ஏற்றும் ஒளிபயனைக் கருதி
இளங்கோ வடிகளிசைத் திறமே—நீதான்
எழுதி முடித்திருப்பின் உரமே—பெற்று
வளத்தால் தமிழியலின் புலமே—மாற்றி
வாழ்த்தும் தமிழரது நிலமே!

2.8. பாவல ரேறு :

தமிழ்நிலத்தை ஆளாமல் துஞ்சுவதும் இல்லை
தமிழ்மொழியைப் போற்றாத வாழ்வா?—தமிழ்ப்பெருமை
ஞாலம் முழுவதும் நன்றெனச் சாற்றுகிற
காலம் வரும்வரைக் கண்மூடுங்—கோலம்
பெறலாமோ? கொள்கை விடலாமோ? வெற்றி
மறவாநீ வீறுபெறல் என்று?—மறவாது
கைத்துமுக்கி ஏந்து, பகைக் காடழித்தல் எப்போது
பொய்த்துவிடு மோவெண்ணம் போடாபோ—வைத்திழந்த
நாட்டின் நலந்தேடும் நல்லதமிழ்த் தூய்மையை
நாட்டப் புறப்படென நல்லெண்ணம்— ஊட்டி
வளர்ப்பவனை வேறெந்தப் பொன்னால் மணியால்
வளமண்ணால் யார்மடக்கப் பார்ப்பார்—தளத்தே
பொறுப்போடு வாழ்வான் பெறுவானே—சீ, சீ
வெறுப்பானக் கையூட்டுக் காசு.

(தொடரும்)

கலைக்களஞ்சியக் கலை

[திரு. சிறுவை. மோகனசுந்தரன் அவர்கள்]

(முன் இதழ் சஉ௬ஆம் பக்கத் தொடர்ச்சி)

இங்ஙனம் ஒரு கலைக்களஞ்சியத்தை அமைக்கும்போது அதன் ஆசிரியர்கள் குழுவும் அதன் தலைமைப் பதிப்பாசிரியரும் பரந்துபட்ட பேரறிவாளராகத் திகழ வேண்டும். எடுத்துக்கொண்ட பணிக்கு உரியவராகத் தம்மை அர்ப்பணித்துக்கொண்டவராக இருத்தல் வேண்டும். ஆசிரியர்கள் குழுவினர் செய்யும் பணியில் சுறுசுறுப்பும், ஆய்வு உணர்வு உடையவராயும், பணியில் உண்மை உணர்வோடு கூடிய ஈடுபாடு உடையவராகவும் இருத்தல் வேண்டும். ஒரு சித்தாந்த அடிப்படையில் பார்த்தால், கடவுள் ஒரு மனிதனைப் பார்த்து, 'உன்னை எதற்காக இந்த உலகத்தில் அனுப்பி வைத்தேனோ அதைச் செய்துவிட்டு புறம்போகாமல் நேரே வா' என்று சொல்லுமாப்போல கலைக்களஞ்சியப் பணிக்கு (அது எம்மொழி, எந்நாட்டினைப் பற்றியதாயினும்) பக்தி உணர்வு உடையவர்களாய் அமைய வேண்டும்.

இனி, தமிழ்க் கலைக்களஞ்சியம் 1953இல் அச்சுக்குச் சென்று 1963இல் முடிந்து அகரவரிசையில் 9 தொகுதிகளாக வெளிவந்தன. ஒவ்வொரு தொகுதியும் 750 பக்கங்கள், சுமார் 1,000 கட்டுரைகள், வெளியில் உள்ள கட்டுரையாளர் சுமார் 200 பேர் வரைந்த கட்டுரைகள், ஒவ்வொரு தொகுதியிலும் வண்ணப் படங்கள் 10, மூவண்ணப் படங்கள் 5, கட்டுரைகளுக்கு விளக்கப்படங்கள் சுமார் 400 உடையதாய் விளங்கி வெளிவந்தன.

இதனை அடுத்து, குழந்தைகள் கலைக்களஞ்சியத்திற்குத் திட்டமிட்டு அவை 10 தொகுதிகளாக வெளிவந்தன அகர வரிசையில். அவை பெரும்பாலும் அறிவியல் சிந்தனை உடையன. ஒவ்வொரு தொகுதியும் பல வண்ண மாற்று அச்சடிப்பு (Multi colour offset printing) முறையில் வெளிவந்தன.

இதனைத் தவிர்த்து மேலும் சில குறிப்புகள்: கலைக்களஞ்சியம் என்ற சிந்தனை 18ஆம் நூற்றாண்டிலேயே ஆங்கிலேயர் தொடர்புடன் விளங்கியுள்ளது. 'Cyclopaedia of India' என்ற 1000 பக்கங்கள் கொண்ட புத்தகம் சென்னையில் அத்தீனியம் அச்சகத்தில் அச்சிட்டு வெளிவந்துள்ளது 1856இல். 1962இல் இரண்டாம் பதிப்பு வந்துள்ளது. அதன் ஆசிரியர், எட்வர்டு பால்பர் (Surgeon Major, Madras Army) என்பவர். அதில்—அன்னபூர்ணா தேவி, அசோகா செட்டு (செடி), பூகம்பம், மடவே மீன் (மடவை மீன்), திப்பிலி, எமன் தர்மராஜா, திராவிடர்கள் யார்—என்பன போன்ற கட்டுரைகள் சுவை உடையன.

அடுத்து 'Encyclopaedia of the Madras Presidency and adjasant States' என்ற நூல் சுமார் 1000 பக்கங்கள் கொண்டதாய் வெளி வந்துள்ளது. அதில் நகரங்களின் அமைப்பு, கோயில்கள், பெரும் புகழாளர்களின் வரலாற்றுச் சிறு குறிப்புகள், எங்கெங்கு கல்லூரிகள் உள்ளன என்பனவெல்லாம் குறிப்பிடப்பட்டுள்ளன. இது 1920—21இல் வெளிவந்தது. இதில் கலவல கண்ணன் செட்டியார் அறப்பணிகள்பற்றிய குறிப்பு சிறப்பாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. சென்னையில் மாடர்ன் பிரிண்டிங் பிரஸ் என்ற அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

1902ஆம் ஆண்டில் புராணம், இதிகாசம், இலக்கியம் முதலியவற்றிலிருந்து பொருள்களைத் திரட்டி ''அபிதானகோசம்'' என்ற பெயரில் திரு நா. ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

1908இல் தமிழ் நூல்களிலும், வடமொழி நூல்களிலும் உள்ள சிறப்புப் பெயர்களுக்கு விளக்கம் தரும் நோக்குடன் ''சிறப்புப் பெயரகராதி'' என்ற பெயரில் சென்னைக் கிறித்துவக் கல்லூரிப் பேராசிரியர் திரு ஈக்காடு இரத்தினவேல் முதலியார் அவர்களால் வெவியிடப்பட்டது.

சென்னைப் பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் திரு ஆ. சிங்காரவேலு முதலியார் அவர்கள் ''அபிதான சிந்தாமணி'' என்னும் பெயரில் ஒரு நூலை 1910இல் வெளியிட்டார். அதில் முன்னவர்கள் செய்த பொருள் அமைப்புடன் வேறு சில பொருள் குறிப்புகளும் இணைத்து ஆக்கப்பட்டது.

திரு டி. வி. சாம்பசிவம் பிள்ளை என்பவர் "Tamil English, Cyclopaedia Dictionary" என்ற பெயரில் மருத்துவம், தாவர வியல், ரசாயனம் ஆகிய துறைகளில் உள்ள பொருள்களைப்பற்றி ஒரு களஞ்சியம் 4 தொகுதிகளாக வெளியிட முயன்றார். இரண்டு தொகுதிகள் வெளிவந்தன. எஞ்சியது விளக்கம் தெரியவில்லை. இந்த சாம்பசிவம் பிள்ளையின் முயற்சி பேரறிஞர் அண்ணாவின் பார்வைக்கு வந்தது. 2ஆவது உலகத் தமிழ் மாநாட்டின்போது அந்தக் களஞ்சியத்தின் ஆங்கில முன்னுரையில் உள்ள சில சிறப்பு அம்சங்களை எடுத்து 49 பக்கங்களில் அச்சிட்டு அயல்நாட்டு அறிஞர்கள் கையில் தந்தார்கள். அதில் ஓர் இடத்தில் நம் உடலைப் பற்றி 'ஈஸ்வர விஞ்ஞான நாடி'யில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"The Siddars' School fully recognises these ninety-six Tatwas and further add that the human body is composed of 72,000 blood-vessels, 13,000 nerves, 10 main arteries, 10 vital airs (Prana), all together the form of a net-work;

and it is, owing to the derangement of the three humours becomes liable to 4448 diseases''

—as per 'ஈஸ்வர மெய்ஞான நாடி'

கலைக்களஞ்சியம் மறுபதிப்பு

கலைக்களஞ்சியம் உருவாகச் சில நெறி முறைகளைக் கவனித்தோம். இனி அதனை மறுபதிப்பு கொண்டுவரும்போது கவனிக்க வேண்டிய சில குறிப்புகள். கலைக்களஞ்சியத்தில் உள்ள சில பொருள் காலத்திற்குக் காலம்—ஏன் நாளுக்கு நாள் மாற்றமடையக் கூடியவைகள் உண்டு. கணிதவியல், வேதியியல், இயற்பியல், புவியியல் முதலியன மாறுதல் அடையும். ஆகவே கலைக்களஞ்சியங்கள் ஒரு தொடர் பதிப்புகளாக வெளிவந்துகொண்டே இருக்க வேண்டும்—பிற்சேர்க்கை (Suplement or year Book) என்ற முறையில் ஒரு மருத்துவர் அறுவை சிகிச்சையின்போது மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகளைத் திட்டமிடுவதுபோல (Plane for the whole operation) இங்கும் திட்டமிட்டு முழுமையான சிந்தனையுடன் பணியை மேற்கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாகப் புவியியலில் வட்டங்கள் (Taluks), மாவட்டங்கள் (Districts) எல்லைகள் மாற்றமடையலாம். மக்கள்தொகை மாறுதல் பெறும். மாவட்டத் தலைநகரம் மாறலாம். வேதியியலில் இயல்புகள், முடிவுகள் மாற்றமடையலாம். இயற்பியலிலும் புதிய ஆய்வு முறைகள் வந்து சேரும். எனவே சில கட்டுரைகளில் இடையில் உள்ள பத்தி நீக்குதல், முடிவில் ஒரு பத்தி சேர்த்தல் பத்திகளின் தொடக்கத்தில் சில சொற்களை மாற்றுதல், சில குறியீடுகள் மாற்றமடைதல், சில எண்கள் மாற்றமடைதல், இங்ஙனம் செய்யும் போது கூறியது கூறல் முறை, ஒன்றும் மற்றொன்றின்மீது படிதல். தேவையான சில குறிப்புகள் ஏற்கெனவே குறிக்கத் தவறி இருக்கலாம். சில இடங்களில் அறிவுக்குப் புலனாகாத பொருள் அமைந்திருக்கலாம். சுருங்கச் சொல்ல வேண்டியவற்றைப் பொருத்தமில்லாமல் விளக்கம் செய்திருக்கலாம். மேலும் தலைப்புகள், துணைத் தலைப்புகள், வகைப்படுத்திய முறைகள் மாற்றமடையலாம். புதிய கலைச் சொற்கள் வந்து சேரலாம். விளக்கப் படங்கள் மாற்றமடையலாம். வரை படங்கள் மாறலாம். இவற்றையெல்லாம் மனத்துட் கொண்டு மிக நுட்பமாக ஈடுபடுதல் வேண்டும். இன்றைய செய்திகள் நாளைய கண்டுபிடிப்புகள். ஆகவே பக்தி உணர்வோடு செய்ய வேண்டிய பணி இது. திசை மாறினால்—சிறிது சோம்பினால் பொருளில் பொதிந்திருந்த செய்திகளை ஆராய்ச்சியாளர்கள் மேற்கொள்ளும்போது தவறான முடிவுகளைக் கண்டு சோர்வடைந்து இழிந்த நிலை அடைதல் கூடும்.

நம் நாட்டுக் கலைக்களஞ்சியங்கள் :

நமது பாரத நாட்டில் கண்ட கலைக்களஞ்சிய இயல்புகளைக் காண்போம். நமது நாட்டு மொழிகளில் தற்காலத்தில் இருக்கும் கலைக்களஞ்சிய அமைப்பு இல்லாவிடினும் கலைக்களஞ்சிய சிந்தனை இருந்திருக்கிறது. அறிவுப் பொருள்கள் அனைத்தையும் சுருக்க மான விளக்கங்களாக ஒரே நூலில் கொண்டுவர முயன்றுள்ளனர். இக் குறிப்புகளையும் திராவிட மொழிக் கலைக்களஞ்சியங்கள்பற்றியும் சிந்திப்போம்.

சமஸ்கிருதம் :

கி. பி. 1131இல் பம்பாய் இராஜ்யத்தில் அமைந்த கல்யாண் என்ற நாட்டை ஆண்ட பூலோகமல்ல சோமேசுவரன் ''அபிலஷி தார்த்த சிந்தாமணி'' (அஃதாவது விழையும் பொருள்களையெல்லாம் வழங்கும் சிந்தாமணி) என்ற நூலினை இயற்றினார்.

19ஆம் நூற்றாண்டில் கல்கத்தாவில் தாராநாத தர்க்கவாசஸ்பதி என்பவர் "வாசஸ்பத்தியம்" என்ற நூலினைத் தொகுத்துள்ளார். இது அகராதியாகவும் கலைக்களஞ்சியமாகவும் அமைந்தது என்பர்.

விசாகப்பட்டினத்திலிருந்து பரவஸ்து வெங்கடரங்காசார்லு என் பவர் ''சப்தார்த்த சர்வஸ்வம்'' என்ற நூலை 1859இல் தொடங்கி 40 ஆண்டுகளில் முடித்திருக்கிறார் என்ற செய்தி 1956இல்தான் தெரியவருகிறது. பிரிட்டானிக்காவைப்போல சமஸ்கிருதத்தில் செய்யவேண்டும் என்ற முயற்சி. ஆனால் அச்சாகவில்லை. திருப் பதியில் இருப்பதாகக் கூறுகின்றனர்.

பழைய ஏட்டுப் பிரதிகளிலிருந்து ''பிரபஞ்ச ஹிருதயம்'' என்ற சிறிய கலைக்களஞ்சியம் திருவனந்தபுரத்திலிருந்து வெளியிடப்பட் டிருக்கிறது. இயற்றியவர் யார் எனவும் காலமும் தெரியவில்லை.

வட மொழியில் இயற்றிய ''அபிலஷிகார்த்த சிந்தாமணி'' எனும் நூலில் விளக்கப்பட்ட பல பொருள்களுடன், பல புதிய பொருள் களையும் சேர்த்துக் கன்னட நாட்டில் இக்கேரியில் அரசாண்டுகொண் டிருந்த பசவப்ப நாயக்க மன்னர் ''சிவ தத்துவ ரத்தினாகரம்'' எனும் நூலினை இயற்றினார். அதற்குப் பிறகு பல சுருக்க நூல்களும் வந்தன எனத் தெரியவருகிறது. யானை பிடித்தல், குதிரை பழக்குதல், போலோ மாதிரியான விளையாட்டு இவைகளைப்பற்றி யெல்லாம் கூட இதில் உள்ளது. தற்காலத்தில் ஆங்கிலத்தில் கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, நாய் வளர்ப்பு அத்துடன் கலப் புறவுகள் செய்து பார்க்கும் செய்திகள் அடங்கிய நூல்கள் எல்லாம் வட மொழியில் வந்திருக்கின்றன.

கன்னடம் :

டாக்டர் சிவராம் காரந்தா என்பவர்களால் 1936இல் ''பால பிரபஞ்சா'' என்ற பெயரில் 3 தொகுதிகளாக வெளிவந்தன. பின்னர் ''விஞ்ஞான பிரபஞ்சா'' என்ற பெயரில் 4 தொகுதிகள் முறையே 1959, '60, '62, '64இல் வெளிவந்தன.

இதன் பின்னர் மைசூர் பல்கலைக்கழகத்தின் சார்பில், ''கன்னட விசுவகோஷா'' என்ற பெயரில் முதல் தொகுதி 1969இல் வெளி வந்தது. இது முற்றிலும் பிரிட்டானிக்கா முறையைத் தழுவியது. பதிப்பாசிரியராய் விளங்கியவர் பேராசிரியர் ஜவரே ஜாரா கௌடா. முதல் தொகுதி வெளிவந்ததும் கருநாடக மாநில அரசு ரூ. 90 லட்சம் மான்யம் வழங்கியது பல்கலைக்கழகத்திற்கு. இது 30 தொகுதிகளாகத் திட்டமிடப்பட்டுள்ளது. 16 தொகுதிகள், மொழி, கலை, பண்பாடு, சமயம் முதலியனபற்றியும் 14 தொகுதிகள் மனிதப் பண்பாட்டுத்துறை, சமூக அறிவியல்பற்றியதாகவும் அமைந்து இதுவரை 8 தொகுதிகள் வெளிவந்துள்ளன. ஒவ்வொரு தொகுதியும் 950 பக்கங்கள். இடையிடையே பல வண்ணப் படங்களும் விளக்கப் படங்களும் உள்ளன.

இவர்களே சிறுவர் கலைக்களஞ்சியத்திற்கும் திட்டமிடப்பட்டு 10 தொகுதிகள் வெளிவந்துள்ளன. ஒவ்வொரு தொகுதியும் 500 பக்கங்கள் உடையனவாய்ப் பலவண்ண மாற்று அச்சடிப்பு (Multi Colour Offset) முறையில் வெளிவந்துள்ளது.

இவைகளை விற்பதில் இவர்கள் மிகச் சிறந்த முறை ஒன்றினை மேற்கொண்டனர். வெளியான நூல்களை இத்தனை படிகள் என அவர்களின் மாநில வங்கியில் (State Bank) கொடுத்து விடு கின்றனர். அந்த வங்கி அனைத்துப் பொது நூலகங்களுக்கும், கல்லூரிகளுக்கும், உயர் பள்ளிகளுக்கும், அரசு ஆதரவுடன் நடை பெறும் கல்வி நெறி நிறுவனங்களுக்கும் கலைக்களஞ்சியப் பிரதிகளை அனுப்பிவைக்கிறது. மேற்படி நிறுவனங்கள் எல்லாம் அரசு மான்யத் தொகை பெறுகின்றன. அந்த மான்யத் தொகை அவர்களுக்கு மாநில வங்கியின் மூலம் (Through State Bank) சேரும்பொழுது, இந் நூலுக்கு உரிய தொகையினைப் பிடித்தம் செய்து, எஞ்சிய தொகையை அனுப்பிவைக்கின்றனர்.

தெலுங்கு :

தெலுங்கு மொழியில் கலைக்களஞ்சிய அமைப்பாக 19ஆம் நூற்றாண்டில் வெளிவந்ததாகத் தெரியவில்லை. ஆனால் அவர்கள் அப்பொழுது சமஸ்கிருத மொழியைத் தழுவி நின்றனர். இது நிற்க.

தெலுங்கு நாட்டில் விசால ஆந்திராவில்.

1. ஆந்திர விஞ்ஞான சமதி
2. ஆந்திர சாகித்ய அக்கதமி
3. தெலுங்கு அக்கதமி—என மூன்று நிலையங்கள் உள்ளன.

1. ஆந்திர விஞ்ஞான சமதி:

தமிழ்க் கலைக்களஞ்சியம் தோன்றிய சில நாட்களில் இந் நிறுவனம் திரு. கோபால் ரெட்டியார் அவர்கள் முயற்சியால் தோற்றுவிக்கப்பட்டது. ''ஆந்திர விஞ்ஞான சரவஸமு'' என்ற பெயரில் தெலுங்கு கலைக்களஞ்சியம் இதுவரை 10 தொகுதிகள் வெளிவந்தன. மேலும் 6 தொகுதிகள் வெளிவர உள்ளன. ஒவ்வொரு தொகுதியும் 1000 பக்கங்கள் உடையது. குழந்தைகள் கலைக்களஞ்சியத்திற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. விசால ஆந்திரம் ஏற்பட்டதும் ஐதராபாத்தில் தமக்கென ஒரு கட்டடம் கட்டிக்கொண்டனர்.

2. ஆந்திர சாகித்ய அக்கதமி: (Not central, but it is Local)

மொழி, இலக்கணம், சமுதாய வளர்ச்சி ஆகிய திசை வழக்குச் சொற்களைத் தொகுத்து அறிவிப்பு வெளியீடுகளாக வெளியிடுகின்றனர். இதன் பெயர் ''மாண்டலிக விருத்தி பதகோசமு'' என்பது.

இதனை அடுத்து பலதுறை இயல்களுக்கு உரிய கலைச் சொற்களை (Terminology) ஒரு பேராசிரியரின் தலைமையில் மூன்று நான்கு துணை ஆசிரியர்கள் நாடாப் பதிவுக் கருவியுடன் ஊர்தோறும் சென்று, ஆங்காங்கு வழங்கப்பெறும் சொற்களைப் பதிவு செய்து, பின்னர் தம் குழுத் தலைவருடன் உட்கார்ந்து ஆய்வு செய்து முடிவு செய்த சொற்களை ''உத்திபகோசம்'' (Occupation Terminology Dictionary) என்ற பெயரில் வெளிவருகிறது. இதுவரை வேளாண்மை, மட்பாண்டவியல், தச்சுத்தொழில் முதலிய 5 தொழில்களுக்கு நூல்கள் வெளிவந்துள்ளன.

இவையே அல்லாமல் தெலுங்கு இலக்கியங்கள், காப்பியங்கள், இலக்கணங்கள், காவியங்கள், பழம் புராண இதிகாசங்கள், நாடகங்கள், இசை நூல்கள் முதலிய பல பழம் ஏட்டுச் சுவடிகளையும், வெளியான நூல்களையும் சேகரிக்கின்றனர். ஓய்வு பெற்ற மொழியியல் பேராசிரியர்கள், பாரம்பரிய பேறிஞர்கள், கல்லூரி பள்ளி மொழி ஆசிரியர்கள் ஆகியவர்களை ஓர் இடத்தில் கூட்டி, மேற்படி நூல்களை ஆய்வு செய்து அதிகாரபூர்வமான பதிப்பாகக் (Authentic Edition) கொண்டுவருகின்றனர். அங்ஙனம் வெளிவரும் நூல் ஒன்று அச்சகக் குறிப்பின்படி அதன் உற்பத்தி விலை (Production Cost) ரூ. 4.50 ஆகிறது. புத்தகத்தின் விற்பனை விலை எவ்வளவு குறிப்பது என அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு, பின்னர் அரசு ரூ. 2.25 என

விலையை நிருணயித்து எஞ்சிய தொகை ரூ. 2.25 அரசு அளிக்கும் என்கிறது.

3. தெலுங்கு அக்கதமி :

இந்த நிறுவனம் உயர்பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் உள்ள நூல்களை வெளியிடுகின்றது. பட்ட மேற்படிப்புக்கு வேண்டிய ஆய்வேடுகளையும் தயாரிக்கிறது. அத்துடன் ''டாக்டர்'' பட்டம் பெறும் அன்பர்களுக்கு வழிகாட்டிகளாகப் (guides) பணி செய்கிறது. பட்டங்கள் வழங்கும் பணி உஸ்மானிய பல்கலைக் கழகத்தினுடையது. இதற்கு ஓர் இயக்கு நரும் 4 துணை இயக்குநர்களும் உள்ளனர்.

மலையாளம் :

மலையாள மொழியில் 1899ஆம் ஆண்டில் பைலோ பால் என்பவர் புராண இதிகாசங்களில் காணும் பொருள்களை அகர வரிசைப்படுத்தி, ''புராண கதா நிகண்டு'' என்ற பெயரில் வெளி யிட்டார். பின்னர் இதனுடன் இலக்கியங்கள், மக்கள் பழக்க வழக்கங்கள், கதைகள் முதலியனவற்றையும் சேர்த்து 1927இல் ''சாகித்ய நிகண்டு'' என்ற பெயரில் வெளிவந்தது.

1958இல் தொடங்கிக் குழந்தைகள் கலைக்களஞ்சியம் 'விஞ்ஞானம்' என்ற பெயரில் மாத்யூ எம், புழிவேலி அவர்களைக் கொண்டு 800 பக்கங்கள் கொண்ட கலைக்களஞ்சியம் 8 தொகுதிகள் வெளிவந்தன.

1962இல் ''விஸ்வ விஞ்ஞான கோஷம்'' என்ற பெயரில் அகரவரிசையில் 10 தொகுதிகள் சாகித்ய பிரவர்த்தக சககரண சங்கத்தால் திரு. பி. டி. பாஸ்கர பணிக்கர் அவர்களைத் தலைமைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்தது.

இப்பொழுது ''திராவிடக் கலைக்களஞ்சியம்'' என 3 தொகுதிகள் வெளிவர திட்டமிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் மொழி, மொழியியல், இலக்கியம், சமயம், பண்பாடு முதலிய பகுதிகள் விளக்கமுறும், இதுவரை 300 கட்டுரைகள் கிடைத் துள்ளன எனவும் மேலும் 600 கட்டுரைகள் வரவேண்டும் எனவும் கூறப்படுகிறது.

இதன் பிறகு 1968க்கு முன்பு திரு. பட்டம் தாணுப் பிள்ளை அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கலைக்களஞ்சியப் பணி அரும்பியது. பேராசிரியர் என். கோபாலப் பிள்ளை அவர்கள் கலைக் களஞ்சியம் வெளியிட வேண்டித் திட்டப்பணிகள் அடிப்படைப் பணிகள் அமைத்து முடித்தபோது மறைந்தார்கள். அதன் பின் சாகித்திய அக்கதமி, சென்னைக் கிளையின் செயலர் திரு. கே. எம். ஜார்ஜ் அவர்கள் (என் நண்பர்) அப் பணியில் ஈடுபட்டு முதல்

இரண்டு தொகுதிகள் வெளி வந்தன. ஒவ்வொரு தொகுதியும் 1000 பக்கங்கள் உடையது. பலவண்ணப் படங்களும் ஒருவண்ணப் படங்களும் இடையிடையே உடையதாய் அகரவரிசையில் வெளி வந்தது. அவர் ஓய்வு பெற்ற பின் திரு. டாக்டர் வெல்லாயணி அருச்சுனன் ஆசிரியராய் அமர்ந்து 18 திங்களுக்குள் 3 ஆம் தொகுதி வெளியிடப்பெற்றது.

இப்பொழுது இதன் அமைப்பு முறையையே மாற்றி "சர்வ விஞ்ஞான கோஷம்" என்ற பெயரில் 20 தொகுதிகள் 30,000 கட்டுரைகள் கொண்டதாய் வெளியிடத் திட்டமிடப்பட்டு செயல்பட்டு வருகிறது. இது பிரிட்டானிக்கா முறையைத் தழுவி இருக்கும். இப் பணியை இயக்குவது. "The State Institute Encyclopeadia Publications" என்பது. உலக அறிவு முழுவதையும் கொண்டு வர அயராது பணி செய்கின்றனர். கலைக்களஞ்சியம் என்பது ஒரு கலையிற் குழுவாக (Faculty), கேரளா பல்கலைக்கழகத்தில் நடை பெறுகிறது. அதில் 48 பேர் பணியாற்றுகின்றனராம்.

இவர்களுக்குக் கலைப்பசி தணியவில்லை. "நிலமும் மக்களும்" (Land and people) எனப் பத்துத் தொகுதிகளுக்குத் திட்டமிடப் பட்டு பணிகள் நடைபெறுகிறது.

இவர்கள் கலைக்களஞ்சியம் வெளியிடும்போது அதனை நான்கு மாவட்டத் தலைநகரங்களில், ஒரே தேதியில் ஒரே வேளையில் (Same date and same time in all the four places) வெளியிட்டு நான்கு இடங்களிலும் நான்கு அறிஞர்களிடம் முதல் பிரதியைத் தரு கின்றனர். அறிஞர்களிடம் தருவதன் காரணம் அடுத்த தொகுதி வெளிவர இத் தொகுதியில் காணும் குறைகளை எடுத்துக்காட்டவே.

தமிழ்ப் புலவர்கள் வரலாறு :

தமிழப் புலவர்கள் வரலாறு எனச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னரே பணியை மேற்கொண்டு 18 நூல்கள் வெளிவந்துள்ளன. இது ஒரு வரலாற்றுக் கலைக் களஞ்சியம். இப் பணிகளையெல்லாம் அரசு ஊக்குவித்து இருந்தால் எவ்வளவோ செய்திகள் நமக்குக் கிடைத்திருக்கும்.

தமிழில் உரையாடல் அறிவியல் நூல் :

தமிழ்க் கலைக்களஞ்சியத்தில் முதல் தலைமைப் பதிப்பாசிரியராய் விளங்கிய திரு. பொ. திருகூடசுந்தரம் பிள்ளை, M. A., B. L., அவர்கள், ',அப்பாவும் மகனும்'', "அப்பாவும் மகளும்" என்ற அறிவியல் நூல்கள் வெளியிட்டார்கள். ஒருவகையில் அவை Mayers Conversation Lexicon போன்றது எனலாம். இல்லை யெனில் அணுகுமுறையில் அதன் சாயல் அமைந்துள்ளது என்பதில் தவறில்லை.

———

சிவஞானப் பயன்

[திரு. சி. சு. மணி, பி.ஏ., நெல்லை.]

உலகத்து மாந்தர்கள் மேற்கொள்ளுகின்ற எம் முயற்சிக்கும், செயலுக்கும் இலக்காக ஒரு பயன் இருந்தேயாக வேண்டும். பயனின்றி முயற்சியில்லை; முயற்சிக்குத் தூண்டுகோலுமில்லை. பயனில் சொல் பாராட்டுவான் பதடியென்றால், பயனில் செயல் பாராட்டுவான் அவனினும் பதர்.

சிவஞானச் செம்பொருள் பயன்தரு பொருள் என்பதை அருளாளர்கள் அனைவரும் உய்த்துணர்ந்து போற்றியிருக்கிறார்கள். மெய்கண்ட தேவநாயனாரும் தமது நூலின் இறுதியியலாகிய பயனியலில் சிவஞானப் பயன் பற்றி எடுத்துரைக்கின்றார்.

பத்தாம் நூற்பாவிற்கு உரை எழுத வந்த மாதவச் சிவஞான முனிவர், ''பாசவீடும், சிவப்பேறும் எனப் பயன் இருவகைப்படும் ஆகலான் அவ்விரண்டனுள் பாசவீடாகிய பயனைப் பெறுமாறு உணர்த்து முகமாக'' இப் பத்தாம் நூற்பா அமைகிறது என்று குறிப்பிடுகின்றார்.

பதினொன்றும் நூற்பாவின் தொடக்கத்தில், ''ஆன்ம லாபம் இரண்டனுள் முடிவாய் எஞ்சி நின்ற சிவப்பேறு கூடுமாறு உணர்த்தி'' இயைபு காட்டுதல் பதினோராம் நூற்பாவின் கருத்து என்றும் உரைக்கிறார்.

எனவே, சிவஞானப் பயன் பாசத்திலிருந்து விடுபடுவதும், அதன் பின்னர், ''நண்ணரிய சிவானந்த ஞான வடிவேயாகி அண்ணலார் சேவடிக்கீழ் அமர்ந்திருத்தலும்'' ஆம் என்பது ஐயத்திற்கிடமில்லாத கருத்து.

மூவகை ஞானங்கள் :

ஞானம் எனப்படும் அறிவு மூவகைப்படும் என்பது சித்தாந்தப் பேரருளாளர்கள் கருத்து. அவர்கள் பகுத்த முறைமைப்படி பாச ஞானம், பசு ஞானம், பதி ஞானம் என்று இப் பகுப்பு முறை வழங்கப்படுகிறது. உலகத்துப் பொருட்களை ஐம்புல உணர்வாலும் நுகர்ந்து அறிந்து அவற்றால் வரும் இன்ப துன்பங்களை வகைப்படுத்தி உணர்ந்து அவற்றின் பயனை ஆரத் துய்ப்பதே பாச ஞானமாகும். அறிவியல்வாதிகளும், உலக நுகர்ச்சியிலே மேம்பாடு அடைந்தவர்களும் இப் பாச ஞானத்தால் இவ்வுலகத்து இன்பங்களை எய்தினர்

எனக் கூறலாம். மின்னாற்றலும், மின் அணு ஆற்றலும், அவற்றால் இன்ப நுகர்ச்சிக்கு உரிய புதிய புனைவுகளும் பாச ஞானத்தால் மாந்தர் இனம் பெற்ற பயன்கள். இப் பயனைப் பெற விரும்புவோர், ''நானார்; என் உள்ளமார்; ஞானங்கள் ஆர்'' என்னும் சிந்தனை இன்றி உலகியல் வாழ்வை நிலைபேறுடையது என்றெண்ணிச் செயல்படுவர்.

பசு ஞான முதிர்ச்சி கைவரப்பெற்றவர்கள் இதற்கொரு படி மேலே சென்று, அறிவினால் அறிந்ததெல்லாம் அசத்தாதல் கருதி உண்முகமாக நோக்கி உண்மையறிய முயன்றவர்கள் எனச் சொல்லலாம். பல்வேறு படிநிலைகளிலே நிற்கும் சமயக் கணக்கர் யாவரும் பசு ஞானம் கைவரப் பெற்றவர்கள். இவர்கள் பல்வேறு தரமும், பல்வேறு திறமும் கைவரப்பெற்று, ''நல்லாறு தெரிந்துணர நம்பர் அருளாமையினால்,'' ''உடங்கு இயைந்து தம்மிற் புணராமை'' கொண்டு ஒழுகுகின்றவர்கள். ''நில்லா உலகம் புல்லிய நெறித்தே'' என்பதை உணர்ந்தவர்கள் எனும் செவ்விய நெறியின் சீர்மை கைவரப் பெறாதவர்கள். ''தம்மை உணர்ந்து, தமை உடைய தன்னுணர்வார்'' சென்ற நெறிக்கண் செல்லும் பேறு வாய்க்கப் பெறாதவர்கள்.

பதிஞானம் என்னும் சிவஞானம் கைவரப்பெறாதவர்களே திவ்வியம் பழுத்த சைவ சித்தாந்தச் செந்நெறி ஒழுகுபவர். இவர்களைக் குறித்தே குமரகுருபர அடிகள், ''ஆரா இன்ப அருங்கனி பிழிந்து சாரங்கொண்ட சைவசித்தாந்தத் தேனமுது அருந்தினர் சிலரே,'' என்று உயர்த்துக் கூறுவார்.

இம்மைப் பயன்:

இம்மை முயற்சிகள் மறுமையில் பயன் தரும் என்பது சில சமய வாதிகளின் கொள்கை. செய்யும் முயற்சிகள் என்றோ எப்போதோ பயன் தரும் என்று கூறின் மாந்தர் அன்றறிவாம் என்று ஆள்வினையின்றி இருப்பர். வைணவ நெறிப்படி முத்திப் பேறு என்னும் வீடடைதல் இம்மையில் இல்லை, மறுமைக்கேயாம். இந்தக் கருத்துக்கு மாறாகச் சங்கரரின் வேதாந்தமும், சைவ சித்தாந்தமும் பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் இம்மையிலேயே முத்திப் பேறடைவர் என்னும் கொள்கையைக் கொண்டுள்ளன. இதனைச் சீவன் முக்தி என்பர். இந்நிலை அடைந்தோரைச் சீவன் முக்தர் என்பர். இவருடைய தன்மையை 'அணைந்தோர் தன்மை' என்று சித்தாந்த நூல்கள் விரித்துக் கூறும்.

> ''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
> தெய்வத்துள் வைக்கப் படும்''

என்று வள்ளுவப் பெருந்தகை அறிவுறுத்துகிறார். வாழ்வாங்கு வாழ்தல் என்ற சொற்றொடரை நன்கு புரிந்துகொள்ள வேண்டுமாயின் பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார், அறந்தலைப்பட்டார், வீழ்நாள் படாமை நன்று ஆற்றினார் என்றெல்லாம் சொல்லுவதைவிட வாழ்வாங்கு வாழ்தலின் மறுதலையை உணர்ந்துகொண்டால், இச் சொற்றொடரின் பொருளைத் தெள்ளத் தெளிய உணர முடியும்.

வாழ்வாங்கு வாழ்தல் என்பதற்கு நேர் எதிர்மொழியாக வல்லாங்கு வாழ்தல் என்ற சொற்றொடர் விளங்குகிறது. இந்த அரிய சொற்றொடர் புறநானூற்றில் புலவர் பெருஞ்சித்திரனார் பாடிய பாடலில் பயின்று வருகிறது.

"நின்நயந்து உறைநர்க்கும் நீநயந்து உறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி எதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேல் குமணன் நல்கிய வளனே."

பெறற்கரிய பெருவளம் பெற்றபோது அதனை அற்றார்க் கொன்றாற்றாது, நட்டார் குறை முடியாது அருஞ் செவ்வி இன்னா முகத்தனாய்க் கடும்பற்றுள்ளத்துடன் ஒருவன் காத்து ஒழுகுவானாயின் அதுவே வல்லாங்கு வாழ்தல் எனப்படும். அவ்வாறன்றி அருள் உள்ளத்தோடு ஊருணிநீர் நிறைந்தது போலவும், மருந்தாகித் தப்பா மரம் போலவும், பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தது போலவும் இருந்து அச் செல்வத்தை ஒருவன் பயன்படுத்துவானாயின் அதுவே வாழ்வாங்கு வாழ்தல் ஆகும்.

துறவும் நுகர்வும் :

வாழ்வாங்கு வாழ்தல் என்ற சொற்றொடர் நமக்கு மற்றொரு கருத்தையும் நினைவுறுத்துகிறது. இறைவன் திருவருளாலே உடல் கொண்டு உலகில் பிறந்த நாம் அவன் நமக்கு வழங்கிய கருவி கரணங்களோடு இந்த உலகில் வாழத்தான் வேண்டும். அவ்வாறு வாழும்போது இன்ப துன்பங்களை நுகரத்தான் வேண்டும். வாழ்க்கையை மாயை என்று வறட்டுத்தனமாகப் பேசித் தன்னை ஒறுத்து அதனால் தன்னுடைய உடலுக்கே ஊறு செய்து கொள்வது நடைமுறைக்கு ஒவ்வாத வழியாகும். துறவு என்பது எல்லோர்க்கும்

ஒருபடித்தாகப் பொருந்துகிற வாழ்க்கை நெறியாகாது. தவமும், தவம் உடையார்க்கு ஆகும்.

நடையை மெய்யென்று, புலன்களால் வரும் இன்பமே இன்ப மென்று வாழ்தல் வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய வாழ்க்கை நெறியாகாது. வாழ்தல் வேண்டும். அவ்வாறு வாழும் போது வாழ்வாங்கு வாழ்தல் வேண்டும் என்பதுதான் திருவள்ளுவர் நமக்குக் கூறும் அறவுரை,

சித்தாந்த நெறி :

அறுபத்து மூன்று நாயன்மார்கள் நடுவிலே இரண்டே இருவர் தாம் துறவு நெறியை மேற்கொண்டவர்கள். ஒருவர் திருமூலர்; மற்றையவர் திருநாவுக்கரசர். பிற அடியார்கள் யாவரும் இல்லற நெறிநின்றே சிவப்பேற்றை எய்திய பெரியோர். தருமபுர ஆதீனத்தின் குரு முதல்வராக விளங்கிய அருளாளர் குருஞான சம்பந்தருக்கு ஆசிரியராக ஆலவாய் அண்ணலின் அருளாலே கிடைக்கப் பெற்ற வர் கமலை ஞானப் பிரகாசர். இவரும் இல்லற நெறி நின்றே ஞானப் பயிர் வளர்த்த பெரியார்.

மண்ணுலக வாழ்க்கையை வெறுத்தும், பழித்தும் பேசுகின்ற பான்மை சைவ சித்தாந்தத்திலே இல்லை. ஞானசம்பந்தர்,

> ''மண்ணின் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
> எண்ணின் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை''

என்ற இனிய தேவாரப் பாடல் மூலம் மண்ணுலகவாழ்க்கை மறுமை வாழ்க்கைக்கு மாருன ஒன்றன்று என்பதை விளக்குகின்ருர்.

திருநாவுக்கரசர், ''வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி, மதித்திடுமின்'' என்று அறைகூவி மண்ணினிற் பிறந்த வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ்தல் வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்துவார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தில்லைத் திருநடனம் கும்பிடப் பெற்று, ''மண்ணிலே பிறந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பமாம்'' என்று உளம் மகிழ்ந்து பாடியதாகச் சேக்கிழார் பெருமான் தமது பெரிய புராணத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மண்ணினிற் பிறந்தார் பெறுகின்ற பெரும்பயன் அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல், கண்ணிஞல் அவர் திருவிழாப் பொலிவு கண்டு ஆர்தல் எனவும் சேக்கிழார் பெருமான் எடுத்து உரைக்கின்ருர்.

> ''ஒழுக்கம் அன்பருள் ஆசாரம் உபசாரம் உறவு சீலம்
> வழுக்கிலா தவம் தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை

யழுக்கிலாத் துறவு அடக்கம் அறிவொடு அர்ச்சித்தல் ஆதி
யிழுக்கிலா அறங்க ளானல் இரங்குவான் பணி அறங்கள்,"

என்பது சிவஞான சித்தியார் காட்டும் அறநெறி. இப் பாட்டுள் துறவு என்பது துறவறத்தை யன்றி இல்லறத்திலும் சேரற்குரிய பிறன்மனே விழையாமை, வரைவின் மகளிர் விழையாமை முதலிய ஆண்டகைமையே என்று உணர்த்துவதற்காக 'அழுக்கிலா' என்ற அடை கொடுத்து ஓதினுர் என்று திருவாவடுதுறை ஆதீன கர்த்தர் சுப்பிரமணிய தேசிகர் சிறப்பித்துக் கூறுவார்.

பாச நீக்கமும், சிவப்பேறுமாகிய இரண்டு பயன்களும் வாழ் வாங்கு வாழ்ந்து, அரன் அடிக்கும், அடியார்க்கும் அன்பு செய்து, இறைவனேத் தொழுது பெறக்கூடும் என்பதைச் சாத்திர நூல்கள் உறுதிப்பாட்டுடன் விளக்குகின்றன. இதுவே பதிஞானத்தின் பயன்.

திருக்குறளுக்கும் மிளகிற்கும் சிலேடை

[மூவரையன், தஞ்சை.]

பத்தா மதிகார முப்பா லிதுபடியும்
சித்த மருந்தாயச் சீர் எழுமே—எத்துணேயும்
சேருமிடம் சீரகமாம் செந்நாப்போ தார்குறளே
சூரோடு நேரென்று கொள்.

திருக்குறள் : பத்துக் குறள் ஆகும் ஓர் அதிகாரம்; முப்பால் என்று உரைக்கப்படும் இதனேப் படியுங்கள்; ஒவ்வொரு குறளிலும் இருக்கின்ற ஏழு சீர்களும் உள்ளத்திற்கு மருந்தாகிச் சேரும். உள்ளத்தைச் சிறந்த உள்ள மாக்கும்.

மிளகு : மேல் பூசும் பத்து ஆகும்; அதிகக் கார குணமுடையது; உப்பால் காரம் குறையும்; சித்த மருத்துவ முறையில் மருந்துப் பொருளாகும்; எப்போதும் சேர்ந்துள்ள இடம் சீரகமாகும்.

"அமைச்சு"— வடசொல்லன்று

[முனைவர் வீ. ப. கா. சுந்தரம், மதுரை.]

புலவர் குழுவில்—புலவர் ஒருவர்—அமார்த்திகர் எனும் வட சொல்லினின்றும் "அமைச்சு" எனும் சொல் தோன்றியது என்றார். இது பிழைபட்ட கருத்து. அமார்த்திகர், அமாத்தியர் என்ற சொல் வடிவங்கள் சமசுகிருதத்திலிருந்து வரப்பெற்றிருப்பின், அவற்றை மாற்றமல் அப்படியே வைத்துக் கொண்டிருப்பார்கள்! எனவே "அமார்த்திகர்" என்பதிலிருந்து அமைச்சு தோன்றவில்லை. அமாத்திகர்>அமைச்சர் என்று தோன்றியதுபோல மற்றோர் சொல்லை ஒப்புமை யமைப்பாகக் காட்டலரிது.

"அமை" எனும் சொல்லினின்றும் பிறந்தது அமைச்சு.

அமைதல் = நெருங்குதல். இப்பொருளில் பயன்பட்டமை :— வழை யமை சாரல் = மூங்கில் நெருங்கிய மலைச்சாரல். (மலை. 180); வழை யமை நெடுஞ்சாரல் (கலித். 53 : 1). வழை யமல் அடுக்கம் (அகநா. 328 : 1), இவற்றால் அமைதல் என்பதன் பொருள் அறியலாகும்.

எனவே அரசனுக்கு நெருங்கி இருப்பவன்—அமைச்சன்; இங்கு நெருக்கம் என்பது பற்றுமை, உறவு, நட்பு முதலியன குறித்தது. அரசனுக்கு நெருங்கிய சுற்றம்போல், நட்புறவுபோல் இருந்து அரும் வினைகளை ஆற்றுபவன்—அமைச்சன் என்று வழிப் பொருள் விரித்துரைத்தல் பொருந்தும்.

இனி—"அமை" என்பது "அமைச்சு" ஆகியது. பிற சொல்லொப்புமைகளை நோக்குக.

முடி>முடிச்சு; தொலை>தொலைச்சு. விளை>விளைச்சு; வரி>வரிச்சு. இனி 'சு' எனும் கடைநிலைக்கு ஈடாக—"சி" கடைநிலை வருவதுண்டு. புணர்>புணர்ச்சி; விரி>விரிச்சி. மலர்>மலர்ச்சி; நெகிழ்>நெகிழ்ச்சி.

எனவே "அமை" எனும் வேர்ச் சொல் வழிப் பிறந்தது. சொல்லே—"அமைச்சு" இதன் பொருள் "உழை இருந்தான்" (பக்கத்திருந்தான்) எனவும் விளக்கப்பட்டுள்ளது. பக்கத்திருந்து அரும் வினைகளைச் செய்பவன் என்பதை "அரும் வினை மாண்டதமைச்சு" என்றும் வள்ளுவர் விளக்குகிறார்.

"பத்துப் பாட்டிலும் எட்டுத் தொகையிலும் இடம் பெறாது, திருக்குறளில் மட்டும் இடம் பெற்றுள்ள சொற்கள் எவை? அவற்றின் வேர்ச் சொற்பொருண்மை என்ன?"—என்று தாமரைத் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள் திருவள்ளுவர் 2000 ஆண்டு நிறைவு விழாவிற்கு ஒரு கட்டுரைப் போட்டி வைத்திருந்தார். அமைச்சு எனும் சொல்லும் அக் கட்டுரைகளுள் ஒன்று. இது பெரிதும் விளக்கங்கள் கூறப்பெற்று முன்னரே நிறுவப்பட்டுள்ளது.

———

பாஸ்கர சேதுபதி பாடிய திருவாலவாய்ப் பதிகம்

[க. சி. கமலையா]

தமிழகத்தின் ஒரு பகுதியைக் கடைசியாக ஆண்ட அரசர்கள் சேதுபதிகளாவர். நாயக்கர் ஆட்சியின்போதும் மதுரைக்குக் கிழக்கிலிருந்து இராமேசுவரம் வரையுள்ள மறவர்நாடு பெயரளவில்தான் நாயக்கருடையதாயிருந்தது. மொகலாய வரலாற்ருசிரியர் நிக்கொலாய் மனுச்சி மறவர்நாட்டைத் தம் நூலில் குறிப்பிடுகின்ருர். மறவர்நாடும் மறவர்களும் 'மறவர்' (Marava) என்ற பொதுப்பெயரால் சேசுசபைப் பாதிரியார்களால் அவர்களுடைய கடிதங்களில் குறிப்பிடப்படுகின்றனர். இரகுநாததேவர் என்ற கிழவன் சேதுபதி ஆட்சிக்காலம் முதல் (1674-1710) முதலாம் முத்துராமலிங்க சேதுபதி காலம்வரை (1762-1795) தனியாட்சி செய்த சேதுபதி ஆட்சி இரகுநாத சேதுபதி என்ற திருமலை சேதுபதி (1647-1672) காலத்திலிருந்தே தொடங்கியது என்றே கொள்ளவேண்டும். மைசூர்ப் படைகளை முறியடித்து மதுரையில் நாயக்கர் ஆட்சியைக் காப்பாற்றிய புகழுக்குரியவன் திருமலை சேதுபதி. அவன் மதுரை அரசியின் தாலியைக் காப்பாற்றியவன் என்று போற்றப்பட்டான். அவனுடைய ஆட்சியின்போது சேதுபதியின் ஆட்சி திருவாரூர் வரை நிலவியது. மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயரின் 'தளசிங்கமாலை'யும் பொன்னுங்கால் அமிர்த கவிராயரின் 'இரகுநாத சேதுபதி ஒரு துறைக்கோவை'யும் அவனைப்பற்றி எழுந்த நூல்களாகும். கடைசியாகச் சேதுநாட்டையாண்ட முதலாம் முத்துராமலிங்க சேதுபதி இராமேசுவரத்திலுள்ள இராமநாதர் கோயிலில் சொக்கட்டான் மண்டபத்தைக் கட்டியவன். சிறுவனுன அரசன் சிறையிலடைக்கப்பட்டான். மீண்டும் ஆட்சிப்பொறுப்பேற்று இறுதியில் புனிதஜார்ஜ் கோட்டையில் சிறைவைக்கப்பட்டு இறந்தான். அவனுடைய வீரதீரச் செயல்கள் பலவாகும். வரலாற்ருசிரியர்க்கு அவை விருந்தாயமையக்கூடும். முத்துராமலிங்க சேதுபதியின் உடன்பிறந்தாள் மங்களேசுவரி நாச்சியாரைக் கிழக்கிந்தியக் கம்பெனி இராணியாக 1803ஆம் ஆண்டு ஏற்றுக் கொண்டது. சுதந்திரநாடான மறவர்நாடு ஜமீனுக மாறியது.

கப்பம் கட்டும் ஜமீன்தார்களாக மாறிய பிற்காலத்துச் சேதுபதிகள் காலத்திலும் தமிழும் சமயமும் இருகண்களாக அவர்களால்

போற்றப்பட்டன. அவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர் பாஸ்கர சேதுபதி (1889-1903) சுவாமி விவேகானந்தரால் 'இராஜரிஷி' என்று அழைக்கப்பட்டவர். அவரைப்பற்றிய கதைகள் பலவாகும். காலப்போக்கில் பெரும்பான்மை மறைந்துவிட்டன. ஒரு லட்சம் ரூபாய்கள் வழங்கி ஒருவரை லட்சாதிபதியாக்கினுர். வீணை சேஷண்ணு அவர் பெயரடங்கிய தில்லாஞ பாடியபொழுது அதே இடத்தில் பத்தாயிரம் ரூபாய்கள் வழங்கினுர். அவருடைய நண்பர் **J. A.** டேவிட் என்பவரைப் பாரிஸ்டர் தேர்வில் பயிற்சிபெற இங்கிலாந்துக்கனுப்பி உதவியவர். இரண்டாம் முத்துராமலிங்க சேதுபதி (1862-1873) பாஸ்கர சேதுபதி (1889-1903) மூன்ரும் முத்துராமலிங்க சேதுபதி என்ற இராசராசேசுவர சேதுபதி (1910-1928) என்ற மூவருமே தமிழில் புலமையுள்ளவர். சைவமும் தமிழும் பாஸ்கர சேதுபதியைக் கவர்ந்தன. பாஸ்கர சேதுபதி 'திருவாலவாய்ப் பதிகம்' என்ற தலைப்பில் பாடிய பத்துப் பாடல்கள் மதுரைச் சோமசுந்தரக் கடவுள்மீது அவர் கொண்டிருந்த இறையன்பைத் தெள்ளத்தெளியக் காட்டுகின்றன. அவை பின்வருமாறு :

பூமிநான் முகனும் புனிதமா லவனும்
போற்றிநின் றடிதொழும் பரம
சோமசுந் தரனே சுருதியின் முடிவே
சூழ்வினை தீர்த்தெமை யாள்வாய்
வாமியின் பாகா வழித்துணை மருந்தே
வானவா வளர்பிறை சூடி
ஆமையோ டுடனே ஏனக்கோ டணியும்
ஆலவா யமருமென் னரசே. 1

கற்பகக் கனியே கருணையங் கடலே
கயல்விழி யுமையொடு கலந்து
பொற்புற வுலக மதனினைப் புரக்கும்
பூரண புராதன முதலே
சிற்பர வெளிக்குச் செழுஞ்சுடர் மயமாய்த்
திகழும்நற் றேயுனை யறிய
அற்பமாம் அறிவோர்க் காகுமோ அறைவாய்
ஆலவா யமருமென் னரசே. 2

வருடமுப் போகம் வளருமா மதுரை
மன்னவா மாகர்நா யகனே
குருடனும் ஒருவன் குணதிசை யுதிக்கும்
குவலய வொளியினைக் காண

மருடனுல் வருந்தும் வகையினை யடைந்தே
வள்ளலே மகிழவுறக் காணேன்
அருள்தர வேண்டும் அடியேனு னுய்ய
ஆலவா யமருமென் னரசே. 3

மெய்யதாம் நின்னை மறந்துமே வீணாய்
வேள்மலர் பாணத்தால் வெந்து
பொய்யதாம் மாதர் புலமையக் காழ்ந்து
புகலிட மின்றிமற் றென்றுஞ்
செய்யவே நினையாத் தீமையை மறவாச்
சிந்தையைச் செய்வதென் றுரைப்பாய்
அய்யனே அமரர் அனுதினம் பரவும்
ஆலவா யமருமென் னரசே. 4

மாமனாய் வந்து மருமகன் றனக்கு
வழக்கினை யுரைக்குமென் வாழ்வே
மாமனாய் இருந்தும் மற்றவ ரிடத்தில்
வழக்கது வழங்குத லழகோ
மாமனா யிருந்த வணிகனைப் போலிவ்
வறியனை மதித்திடல் வேண்டும்
ஆமனே அரியே அசுரர்க ளறியே
ஆலவா யமருமென் னரசே. 5

மீனலோ சனியை மேவுமென் பரனே
மேன்மையாம் வழுதியன் வேண்ட
கானகத் துறையும் பாம்புடன் புலியும்
காணவே தூக்கிய காலைத்
தானமே மாறத் தந்திடு மீசன்
தரணியோர் புகழ்தடா தகையாள்
ஆனன மலருக் கருக்கினே னப்பா
ஆலவா யமருமென் னரசே. 6

மந்திர மாகும் நின்றிரு நீற்றை
மதியுடன் னணிபவர் மகிழ்ந்து
சுந்தர நின்னைத் துரியமுந் துரியா
தீதமு மாகவே துணிந்து
கந்தரந் தன்னிற் கறைதனை நிறுத்தும்
கடவுளே களவிள ராகி
அந்தியும் பகலும் போற்றவே யருள்வாய்
ஆலவா யமருமென் னரசே. 7

பழமறை தேடும் பரமனே பரவும்
பத்தர்கட் கருளுந் தற் பரனே
தழற்பிழம் புருவாய்த் தாமரைக் கண்ணன்
தருக்கினைத் தணித்ததோர் தருவே
கழற்றெழு துய்யக் கடையனேன் கவலை
கொள்வதைக் கடைக்கணித் தருள்வாய்
அழலுமே யரக்கன் றன்றனக் கிரங்கும்
ஆலவா யமருமென் னரசே. 8

மாணிக்க மலையே மரகதப் பிழம்பே
மறையவர் மகழும்நற் கொழுந்தே
காணியின் னரசி நாணவே செய்த
காட்சியே கவுணியன் மதலை
வாயாற் சுட்டி பகர்ந்திடும் பரம
பாண்டியன் புதல்வியென் றறிய
ஆணிமுத் துயரும் அணிகளு மீந்த
ஆலவா யமருமென் னரசே. 9

வேதியாம் வேய்மாலைதான் தான்சூடும்
வேந்தனே வீரனே விமலா
ஓதியே உந்தன் உயர்வுறும் நாமம்
உய்யவே உறுதியாய் உணர்ந்தேன்
சோதியே சுடரே தூய்மைசேர் சுருதி
தொடரொளுத் தோடுடைச் செவியா
ஆதியே அரசே ஆனந்த மலையே
ஆலவா யமருமென் னரசே. 10

— —

அறிவில் தெளிவு வேண்டும்

சமுதாயம் செம்மையாக அமையாதபோது அதில் உள்ள கோளாறுகள் இயற்கைபோல் தோன்றும். ஓடும் இரயில் குழந்தைகளின் அறிவை மயக்குதல்போல், சமுதாயக் கோளாறு கற்றவரின் அறிவையும் மயக்கிவிடும். சில ஆண்டுகள் வழக்கத்தில் இருந்த ஒன்றை இயற்கையானது என்று எண்ணி மயங்குவது கற்றவர்களிடமும் உள்ளது. வெறுங் கல்வியுடன் நில்லாமல் அறிவுத் தெளிவு பெற்றவர்கள் அவ்வாறு மயங்குதல் கூடாது.

முனைவர் மு. வரதராசனர்.

சிந்துவெளி முத்திரைகளில் செந்தமிழ்ச் சொற்கள்

[பேராசிரியர் இரா. மதிவாணன்]

சிந்துவெளியில் வழங்கிய மொழி தமிழே என்று திண்ணமாக அறுதியிட்டுக் கூறினுர் தொழுதகை ஈராசு அடிகளார். அவரைப் பின்பற்றி, சிந்துவெளி முத்திரைகளைப் படிக்க முயன்று வருபவர் வெகு சிலராகவிருத்தலின், வரலாற்றுக் கருவூலமான சிந்துவெளி முத்திரைகள் இன்னும் கட்புலனுகிக் கருத்துப் புலனுகாப் புதிராக நீடிக்கிறது.

சென்ற ''செல்வி'' இதழில் சிந்துவெளி எழுத்துகளைப் பாவாணரின் அறிவுரைகளைப் பின்பற்றி நான் படிக்க முயன்ற செய்தி குறிப்பிட்டிருந்தேன். நான் படித்த முத்திரைகளில் ஆளப்பட்டுள்ள செந்தமிழ்ச் சொற்களைக் கீழ்வரும் பட்டியலில் தந்துள்ளேன். உருசிய அறிஞர்களும் பின்லாந்து அறிஞர்களும் வெளியிட்டுள்ள நூல்கள் என் கருத்தைக் கவர்ந்தாலும், பன்னுட்டுத் தொல்லியல் எழுத்துச் சான்றுகளைத் தமிழின் முந்து மரபுகளோடு ஒப்பிட்டுக் காண முயன்றதாலும் இம் முயற்சி எனக்கு வெற்றிக்கனி நல்கி வருகிறது. சிந்துவெளியில் கிடைத்த முத்திரைகளின் வரிசை எண்ணையும் தமிழ்ச் சொற்களையும் நிரலே தந்துள்ளேன்.

	சிந்துவெளி முத்திரை எண்.	முத்திரையில் காணப்படும் சொல்.
1.	5014	அதியர்
2.	2572	உதயன்
3.	1157	உதியர்
4.	2636	உதியன்
5.	220	உன்னி
6.	2106	ஐயண்ணல்
7.	2645	செம்பியன்
8.	2100	நர்ணியன்
9.	1025	நாந்தன்
10.	3863	கண்ணன் மாசாத்தன்
11.	2147	அண்டன் உன்னியன்
12.	1314	மாசாத்தன் அய்யாவு

13.	123	வைகாட்டு சாத்தன்
14.	4108	கானாண்டகோ அணமடன்
15.	203	வைகாஞ்சி சேய் அவியர்
16.	2604	கதழாத இண்டை நம்பி
17.	422	நல்நா சேய்............
18.	1406	இண்டன்......திண்ணன்
19.	251	கா குஞ்ஞி (கொடிஞ்சி) சாய் ஆவி அற்றவன்
20.	1079	மாவச்சன் நன்னன் சேய் சாணன்

வரிசை எண் 19இல் உள்ள 251 எண்ணிட்ட முத்திரையில் கொடிஞ்சி (குஞ்ஞி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) என்னும் கல்மண்டபம் சாய்ந்து இறந்தவனின் காரணப்பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது, கடலுண் மாய்ந்த இளம்பெருவழுதி என்ருற்போல் தமிழ் மரபையொட்டி இடப்பட்ட பெயராகத் தெரிகிறது. இறந்தவர் பெயராலும் முத்திரை வெளியிடும் வழக்கம் இருந்ததுபோலும்.

சிந்துவெளி முத்திரைகள் வணிகர்களாலும் அரசர்களாலும் பெருந்தரத்து அதிகாரிகளாலும் ஆளப்பட்டவை. முத்திரைகளில் குறிப்பிட்ட இலச்சினையும் அம் முத்திரைக்குரியவரின் பெயரும் காணப்படுகின்றன. இம் முத்திரைகளால் சிந்துவெளியில் வாழ்ந்த மக்களின் பெயர்களை மட்டும் அறிய முடிகிறதேயன்றி வேறு எச்செய்தியையும் அறிய முடியவில்லை, சிலவிடங்களில் ஒரே முத்திரை ஒன்று முதல் பத்துவரை கிடைத்திருப்பது ஏன் என்று தெரியவில்லை. ஒருவர்க்கு ஒரே முத்திரை போதுமானது. ஒரு வணிகன் அல்லது அரசன் ஏன் பத்து முத்திரைகளை வைத்துக் கொள்ள வேண்டும் என்னும் வினவுக்கு மறுமொழி கிடைக்கவில்லை. முத்திரைகளில் பெயர் பொறிக்கும் அளவுக்கு நாகரிகம்பெற்ற சிந்துவெளி மக்கள் வேறு எழுத்து ஆவணங்களும், இலக்கியங்களும், கல்வெட்டுகளும், செப்பேடுகளும் வைத்திருந்தே ஆகவேண்டும். தொல்பொருள் ஆய்வாளர்கள் இதில் தனிக்கவனம் செலுத்திஞல் வரலாற்றுத் துறையே வியப்படையும் அரிய செய்திகள் கிடைக்கலாம்.

மேற்கண்ட இருபது முத்திரைகளில் அதியர், உதியர், செம்பியன் போன்றவை அரச மரபினரின் குடிப்பெயர்கள். சாத்தன் அச்சன், மாவச்சன், சாத்தன் என்று வருவன வணிகரின் பெயர்கள். ஏனையவை அரசப் பெருந்தரத்து அதிகாரிகளின் பெயர்கள். நன்னன் சேய் என்பது நன்னன் மகன் எனப் பொருள்படும்.

செய்திகள்

வான்புகழ் வள்ளுவர் விழா

சென்னை, வியாசர்பாடி, மாக்கவி பாரதி நகர், ஆறுவது குறுக்குச் சாலையில் உள்ள முனைவர் சி. பழனிவேலு எம். எஸ்சி., பி.எச்டி. அவர்களின் இல்லத்தில் ''தமிழ் இலக்கிய உறவின்'' சார்பில் 21-7-84 அன்று மாலை ''வான்புகழ் வள்ளுவர் விழா'' நடைபெற்றது. ஏராளமான தமிழன்பர்கள் குழுமியிருந்தனர். அமைப்பாளர், பாரதி நகர் பாரதி, பா. ரா. நாகராசன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். கவிதைமணி மயிலை சிவசண்முகசுந்தரம் பி.லிட். அவர்கள் தலைமைதாங்கினார். பேரா சிரியர், கவிஞர் அரசு மணிமேகலை எம்.ஏ., எம்.ஃபில் அவர்கள் ''வள்ளுவர் வகுத்த இல்லற வாழ்க்கை'' என்னும் பொருள் குறித்துச் சொற் பெருக்காற்றினார். முனைவர் கவிஞர் ஏர்வாடி எஸ். இராதா கிருட்டிணன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். சான்றோர் உ. சாலமோன் அவர்கள் பரிசுகளை வழங்கினார். முனைவர் சி. பழனிவேலு நன்றி நவில, கூட்டம் இனிது நிறைவேறியது.

நெல்லைத் தனித்தமிழ் இலக்கியக் கழக 24ஆம் ஆண்டுவிழா

நெல்லைத் தனித்தமிழ் இலக்கியக் கழகத்தின் 24ஆம் ஆண்டு விழா 24-6-84 ஞாயிறு மாலை பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது. கழகத் தலைவர் பேராசிரியர் பா. வளன் அரசு தலைமை தாங்கினார். செயலாளர் பெ. இரா. வெள் ளத்துரை வரவேற்றுப்பேசினார். தில்லிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் சாலை. இளந்திரையன் அவர்கள் ''பஃறுளி முதல் வையை வரை'' என்னும் பொருள் குறித்தும், பேராசிரியை முனைவர் சாலினி, இளந்திரையன் அவர்கள் ''புதின இலக்கியத்தின் சில புதிய போக்குகள்'' குறித்தும் சிறப்புரையாற்றினர். பேராசிரியர் சாலை இளந்திரையனுக்குப் பேராசிரியர் பா. வளன் அரசும், பேராசிரியை சாலினி இளந்திரையனுக்குப் புலவர் இரா. இராசம்மாளும் பொன்னாடை அணிவித்தனர்; புலவர் சு. நடராசன் புத்தகங்கள் வழங்கினார். துணைச் செயலாளர் தே. வருக்கீசு நன்றி நவில, நாட்டுப் பண்ணுடன் கூட்டம் நிறைவுற்றது.

பேராசிரியர் ம. கி. தசரதன் மறைவு

சென்னை, பச்சையப்பன் கல்லூரி முதல்வர் பேராசிரியர் ம. கி. தசரதன் அவர்கள் 3—8—84இல் சென்னை செனாய் நகரிலுள்ள தம் இல்லத்தில் தமது 54ஆவது அகவையில் இயற்கை எய்தினார்கள் என்ற செய்தியறிந்து வருந்துகிறோம். பேராசிரியர் அவர்கள் தமிழ்ப் பற்றும் அரசியல் ஈடுபாடும் கொண்டவர். இவர் காஞ்சிபுரம்

பச்சையப்பன் கல்லூரி, சென்னை கந்தசாமி நாயுடு கல்லூரி ஆகிய வற்றிலும் முதல்வராகப் பணியாற்றியுள்ளார். மறைந்த பேராசிரியரின் குடும்பத்தார்க்கும் நண்பர்கட்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

தினமலர் இராம. சுப்பையர் மறைவு

'தினமலர்' என்னும் நாளிதழின் நிறுவனரும், சிறந்த நாட்டுப் பற்றாளரும், தமிழ்ப் பற்றாளரும், பொது நலத் தொண்டில் ஆர்வமும் ஈடுபாடும் கொண்டவருமான திரு. டி. வி. இராம சுப்பையர் அவர்கள், திருநெல்வேலி, வண்ணார்பேட்டையிலுள்ள தமது இல்லத்தில், தமது 77ஆம் அகவையில் 21—7—84 இல் காலமானார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம்.



திரு. ஐயர் அவர்கள் கன்னியாகுமரி—நெல்லைத் தொடர்வண்டிப் பாதை அமைப்பதற்காக 35 ஆண்டுகட்கு முன்பே அதற்கென ஒரு குழு அமைத்து மைய மாநில அரசியல் தலைவர்களை அணுகி வற்புறுத்தி வந்தார். குமரி மாவட்டம் பெரும்புலவர் திரு. ஆறுமுகம் பிள்ளை அவர்களிடம் தமிழ் பயின்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. நெல்லை, மதுரை. ஈரோடு, சென்னை ஆகிய இடங்களிலிருந்து தினமலர் வெளிவரச் செய்த பெருமை இவருக்குண்டு, மறைந்த திரு. ஐயர் அவர்களின் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

(சிலம்பு ௫௮, ௪௬௩-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியர்)	10	00
திரு. ஆ. சுப்பையா பிள்ளை அவர்கள் (கழக மேலாளர்)	5	00
திரு. சிவ. சிவராமலிங்கம் (மகள் சிவ. ஞானப் பார்வதி—எம். திலக், திருமண நன்கொடை)	25	00
திரு. தி. இராசமாணிக்கம், பொள்ளாச்சி (மணிவிழா நன்கொடை)	25	00
கயப்பாக்கம் திரு. முத்துலிங்கா ரெட்டியார் அவர்கள்	5	00
திரு. A. T. A. ஈஸ்வர் அவர்கள்	5	00
திருமுருக விசாக நம்பி அவர்கள்	5	00
சூரன்குடி திரு. அ. ஆறுமுகம் அவர்கள்	5	00
கல்லை தே கண்ணன் அவர்கள் (ஆசிரியர் வள்ளுவர்வழி)	5	00

மதிப்புரை

சொர்க்கத்தில் இயேசுவின் சீடர்கள் (ஒரு பேட்டி)

[ஆசிரியர்: பேராசிரியர் மா. சேசையா, M. A., Dip. in S. Sc., Dip. in German (Ph. D.), மாணிக்கம் பதிப்பகம், 73, மந்தை வெளித் தெரு, சென்னை-28 பக்கங்கள் 24+216, விலை: உரு. 20-00.]

இயேசு பெருமானுடைய சீடர்களை விண்ணுலகத்தில் பேட்டி கண்டு உரையாடுவதுபோல், இந் நூல் வழி ஆசிரியர் ஒரு புதிய இலக்கியத்தைப் படைத்துள்ளார். இப் பேட்டியின் வாயிலாக அவ் வடியார்களுடைய வாழ்க்கை வரலாறுகள் அவர்தம் 'தன் வரலாறு' களாகச் சுவைபடச் சொல்லப்படுகிறது. உரையாடல்கள் கதை போல் சுவைபடச் செல்கின்றன. நல்ல தமிழில் இனிய நடையில் அழகிய பதிப்பாக வெளிவந்துள்ளது இந்நூல்.

இரவீந்திரநாத தாகூரின் கீதாஞ்சலி (தமிழ்த் தழுவல்)

[ஆசிரியர்: புலவர் பா. வரதராசன், எம்.ஏ., அருள்மொழிப் பதிப்பகம், 40, பெரிய மணியக்காரத் தெரு, செங்கற்பட்டு-1, பக்கங்கள் 8+108, விலை: உரு. 7-50.]

இரவீந்திரநாத தாகூரின் 'கீதாஞ்சலி' என்னும் கவிதைத் தொகுப்பு உலகப் புகழ்பெற்றது; நோபல் பரிசு பெற்றது. ஆங்கிலத்தில் உள்ள இந் நூலைச் சைவசித்தாந்தப் புலவர் திரு. வரதராசன் அவர்கள் மூலநூலின் சுவைகுன்றாத வகையில் நல்ல தமிழ்க் கவிதைகளாக எழுதியுள்ளார்கள். மூலநூலைப் படிக்காதவர்கள் இதனைப் படித்துச் சுவையும் பயனும் பெறலாம்.

பாரதிதாசனின் சிந்தனைக் களஞ்சியம்

[ஆசிரியர்: எஸ். குலசேகரன், அமிழ்தம் பதிப்பகம், நார்த்தாம் பூண்டி, திருவண்ணாமலை (வ. ஆ.) 606 809, விலை: உரு. 8-00.]

பாரதிதாசன் நல்ல சிந்தனையாளர். அவர் பாடிய 'ஆத்திசூடி' யையும், இளையார் ஆத்திசூடியையும் நிலைக்களன்களாக வைத்து, நாட்டு நடப்புகளையும் சூழ்நிலைகளையும் எடுத்துக்காட்டுகளாக்கிப் பாரதிதாசனின் சிந்தனைக் களஞ்சியம் என்னும் இந்நூலினை உருவாக்கியுள்ள இவ்வாசிரியரின் முயற்சி பாராட்டத்தக்கது.

தனித் தமிழ்ப் படைப்பாய்வு

[தொகுப்பாசிரியர்: க. தமிழ்மல்லன், க. இ., கல். இ., தனித் தமிழ்க் கழகம், 168, மாரியம்மன் கோயில் தெரு, தட்டாஞ்சாவடி, புதுச்சேரி-605009. விலை: உரு. 8-50]

தனித் தமிழ் வளர்ச்சிக்கென அரிய பணிகள் பல ஆற்றிவரும், புதுவை தனித்தமிழ் கழகம் நடத்திய ஆய்வரங்குகளில் படிக்கப் பெற்ற அரிய ஒன்பது கட்டுரைகளின் தொகுப்பே 'தனித் தமிழ்ப் படைப்பாய்வு'. இதில் அறிஞர்கள் கு. ச. ஆனந்தன், பா. அ. பசு

பதி, தேவமைந்தன், இரா. இளங்குமரன், இரா. மதிவாணன், பா. இறையரசன், சு. வேல்முருகன், மா. அய்யாச்சாமி, கு. திருமாறன் ஆகியோரின் அரிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. கட்டுரைகள் அரசியல், அறிவியல், உளவியல், மொழியியல், சொல்லாக்கம், வரலாறு ஆகிய துறைகள் பற்றியவை. படித்துப் பயன் காணவேண்டிய கட்டுரைகள். தனித்தமிழில் அறிவியல் போன்ற பல்துறைச் செய்திகளைக் கூறமுடியுமா என்று கேட்போர்க்கு விடையளிக்கும் வகையில் எல்லாத் துறைச் செய்திகளையும் இக் கட்டுரைகள் தனித்தமிழ் வாயிலாகவே வெளியிட்டுள்ளமை பாராட்டுக்குரியது.

தீயில் ஒரு தீவு

[ஆசிரியர்: கி. சு. கிருஷ்ணசாமி, எம்.ஏ., எம்.பில்., சுருளி பதிப்பகம், 777, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை-600 010, விலை: உரூ. 1-50.]

''நாமும் நமது மத்திய மாநில அரசுகளும் தலைவர்களும் ஒன்று சேர்ந்து ஆற்றவேண்டிய பணிகளுக்குச் சில யோசனைகள்தாம் இந்தத் தொகுப்பு'' என்னும் முன்னுரையுடன் ''இயற்கையே நீயுதவு இலங்கைவாழ் தமிழர்க்கு'' என்று துவங்கி ''நிம்மதிதான் என்று வரும்'' என்று முடியும் 21 தலைப்புகளில் விறுவிறுப்பான புதுக் கவிதைகளைப் புனைந்துள்ளார் இந் நூலாசிரியர். சிங்களவரோடு நம் கவிஞர்கள் தொடுக்கும் எழுத்துப் போரில் இதுவும் ஒன்று. இஃது ஆசிரியரின் முதல் நூல். இதுவே முதல் வெற்றியாகவும் திகழ்கிறது.

கொறிப்பு

[நெறியாளர்: மா. ரா. அரசு, ஆசிரியர் குழு: ஆ. இளங்கோவன், மோ. தமிழ் மாறன், த. திலிப்குமார், இரா. குணசேகரன், சு. பாஸ்கரன், த. பழனி, 367, மேலவீதி, தஞ்சாவூர்-613 009. நன்கொடை: 50 காசு.]

தட்டச்சு செய்யப்பட்டுத் தனிச் சுற்றுக்கு மட்டும் உரியதாகும். இவ்விதழின் மணி ஒன்று வரப்பெற்றோம். ஏடெழுத வேண்டும் என்னும் ஆர்வத்தால் உந்தப்பட்ட இளைஞர் சிலரின் கொறிப்பே இவ்விதழ். இதில் பல்சுவை கட்டுரைகள் கொறிக்கப்படுகின்றன. ஆசிரியர் குழுவின் முயற்சி பாராட்டத்தக்கது.

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் (கிருஷ்ணஜயந்தி சிறப்பிதழ்)

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்—ஆவணி இதழ், கிருட்டிணசயந்தி சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. இதில் பதினான்கு கட்டுரைகள் அடங்கியுள்ளன. திருமுருக கிருபானந்தவாரியார், ந. ரா. முருகவேள், கி. வா. ஜகந்நாதன் ஆகியோரின் கட்டுரைகளும், மற்றும் பயனுள்ள சமயக் கட்டுரைகளும், ஆங்காங்கே அறிஞர்களின் கருத்துரைகளும் இடம்பெற்றுள்ளன. ஆன்மீக உணர்வூட்டும் வகையில் இச் சிறப்பிதழ் அமைந்திருக்கிறது.

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக
80, பிரகாசம் சாலை, சென்னை-108. அப்பர் அச்சகத்தில்
திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: இரா. முத்துக்குமாரசாமி, எம். ஏ., பி. லிட்.

Vol. Lviii (௫௮) 1983—84

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

★

ஐம்பத்தெட்டாவது சிலம்பு

திருவள்ளுவர் ஆண்டு ௨௦௧௪ - ௨௦௧௫

★

தென்னிந்திய தமிழ்ச் சங்கம்
80, பிரகாசம் சாலை (பிராட்வே),
சென்னை-600 108.

"செந்தமிழ்ச் செல்வி"

(செந்தமிழ்த் திங்கள் இதழ்)

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

உள்ளுறை

அதியனும் அதிகனும்
—கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன் கஉச

அப்பர் பாடிய ஆறை வடதளி
—டாக்டர் இரா. கலைக்கோவன், எம்.பி.,பி.எசு., டி.ஓ. ஙகங, ஙசாங, சா0க

''அமைச்சு'' வடசொல்லன்று
—முனைவர் வீ. ப. கா. சுந்தரம், மதுரை ரு0உ

அரப்பா காலப் பண்பாடு கசாக

அருளானந்தக் கடல் அமுது—க. சி. கமலையா கசங

அரையமும், இத்தியும், அதவமும்—பி. எல். சாமி, இ. ஆ. ப. ருரு

அவர்க்கென் நன்றி !—வேலூர் ம. நாராயணன், எம்.ஏ. உகஎ

அழித்திடுவோம் தமிழ்ப் பகையை !—நாகை வேலன் ங0அ

அறிஞரைப் போற்றுவோம் !
—வேலூர் ம. நாராயணன், எம்.ஏ. உகூகூ

அறிவூட்டும் புதினம்
—தி. நா. அறிவு ஒளி, க.மு., கல்.இ. உசஉ, உஅஎ

அறுப்புக்கோட்டைப் பட்டு வரும்—க. சி. கமலையா ஙருச

அனைத்துலக முதல் சைவசித்தாந்தக் கருத்தரங்கம் உகூங, ஙஅக

ஆ (பசு)—நா. எழில்-மகிழ்நன் உஙக

ஆட்சிமொழிச் சிந்தனைகள்
—தமிழ்த்தொண்டர் கோ. முத்துப்பிள்ளை கூகூ, ங0ங, ஙருக,

ஆய்தமும் ஆயுதமும் சஎங
—கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன் கசாச

ஆவின் பாலிற்கும் குழந்தைக்கும் சிலேடை
—மூவரையன், தஞ்சை உஉஅ

ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் மொழிகளும் தமிழும்
—பி. இராமநாதன், எம்.ஏ., பி.எல்., சென்னை ஙருகூ

இந்தப் பொங்கல்...!—சிவ. சிவராமலிங்கம், எம். ஏ. ககூங

இந்தியருக்கு நோபல் பரிசு கசகூ
இனி என்ன ?—நல்லார்க்கினியன் அசு
இனியொரு 'பிள்ளை' பிறப்பாரோ ?
—பேராசிரியர் தமிழன்பன், எம்.ஏ., எம்.ஃபில். உகச
ஈழத்தைக் காப்ப தெந்நாள் ?—நாகை வேலன் உஉரு
ஈழம் வெல்வோம்—புலவர் திருமங்கலம் வை. தங்கமணி உஎ
உலக வழக்கில் இலக்கண அமைதிகள்
—பேராசிரியர் இரா. மதிவாணன் உசுங
எண்மர் எண்மணி மாலை—மருத்துவர் மறையரசன் சஙரு, சஅஎ
எழு பகையை வெல்ல எழு—கவிஞர் 'இடி முரசு', சென்னை ஙகஉ
ஐவாய் மான்—பேராசிரியர் மு. வை. அரவிந்தன், கிருஷ்ணகிரி ஙங
ஐவாய் மான்—பேராசிரியர் இரா. மதிவாணன் சுச
ஒரு விளக்கம்—ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனார் ஙருங
ஒரே வழி !—வேலூர் ம. நாராயணன், எம்.ஏ. உஅசு
'ஓடி வா'—புலவர் திருமங்கலம் வை. தங்கமணி கஎசு
ஓய்வெடுக்கச் சென்றனையோ !
—புலவர் சு. சண்முகம், பி.லிட்., பி.எட்., கோட்டூர் கூரு
கஃபா—ஒரு விளக்கம் கருங
கங்கை தங்கிய சடையர்
—தி. இராசமாணிக்கம், பி.ஏ., பி.காம்., பொள்ளாச்சி உஅக
'கடியன்'—பி. எல். சாமி, இ. ஆ. ப. கஎக
கந்தரலங்காரச் சந்தப் பாடல்கள்—க. சி. கமலையா சுஎ
கருத்துக்கொல்லன்—வேலூர் ம. நாராயணன், எம்.ஏ. ககூஅ
கலைக் களஞ்சியக் கலை
—சிறுவை மோகனசுந்தரன் அவர்கள் ச0சு, சசகூ, சஅகூ
கலைச் சொல்லாக்கம் கஉக
கலைஞர் மணிவிழா வாழ்த்து
—பெரும்புலவர் இர. திருஞானசம்பந்தன் சஉஎ
கலையுலகின் நிலை உயர—த. சி. வே. கஉங
கவிதை நெஞ்சம்
—சொ. சு. செந்திலாண்டவன், எம்.ஏ., பி.எட். ஙஅங

கழக நூலாசிரியர் சு. அ. இராமசாமிப் புலவர் மறைவு எரு
கழகம் காப்போம்!—பேராசிரியர் சிவ. சிவராமலிங்கம், எம்.ஏ. உகஉ
கழகம் வ. சுப்பையா பிள்ளை அறக்கட்டளை நிறுவு விழா எ௩
காலனைக் காய்தல்—க. சி. கமலையா அஎ
காளைத் தேவரா ? மணவழகரா ?
—டாக்டர் இரா. கலைக்கோவன், எம்.பி.பி.எசு., டி.ஓ. சா௩க
கிரேக்க அலெக்சாண்டரும் ரோமானிய சீசரும்
—க. சி. கமலையா உ௩சு, உஎ0
குமரி மலர் ஏ. கே. செட்டியார் பிரிவு உஅ
குறளாயம் (Kuralistic Society) ௩எச
சங்க நூல்களில் ஆலம்—பி. எல். சாமி, இ. ஆ. ப. எ
சங்க நூல்களில் ஆமைகள்—பி. எல். சாமி, இ. ஆ. ப. (ஓய்வு) சருஎ
சங்க நூல்களில் உன்னமும் ஆவிரையும்
—பி. எல். சாமி, இ. ஆ. ப. உகஅ
சங்க நூல்களில் ஓமை—பி. எல். சாமி, இ. ஆ. ப. (ஓய்வு) ௩சஎ
சங்க நூல்களில் கரந்தை—பி. எல். சாமி, இ. ஆ. ப. (ஓய்வு) சக௩
சங்க நூல்களில் நாகமும் வழையும்
—பி. எல். சாமி, இ. ஆ. ப. (ஓய்வு) சஅக
சங்க நூல்களில் யா மரம்—பி. எல். சாமி, இ. ஆ. ப. (ஓய்வு) ௩0கூ
சப்பானிய மொழியில் பாரதியின் குயில்பாட்டு ககூஉ
சிதம்பர இரகுநாதன் அவர்கட்கு சாகித்திய அகாடமி விருது உ0ச
சிந்துவெளி எழுத்தும் கீழ்வாலை ஓவியமும்
—பேராசிரியர் இரா. மதிவாணன் சககூ, ச௩அ
சிந்துவெளி முத்திரைகளில் செந்தமிழ்ச் சொற்கள்
—பேராசிரியர் இரா. மதிவாணன் ரு0௩
சில புதிய கல்வெட்டுகள்
—டாக்டர் இரா. கலைக்கோவன், எம்.பி.,பி.எசு., டி.ஓ. கஉஅ
சிவஞானப் பயன்—சி. சு. மணி, பி.ஏ., நெல்லை சகூஎ
சிவ வழிபாட்டில் அஞ்செழுத்து
—பேராசிரியர் இரா. மதிவாணன் உஉகூ
சிறப்புமிக்க ஆவுடையார் கோயில்
—தி. இராசமாணிக்கம், பொள்ளாச்சி உ௩ச
சீர்மிகு சென்னைப் பல்கலைக் கழகம் சக

செய்திகள் ௩௫, ௭௮, ௧௧௭, ௧௫௫, ௨௦௫, ௨௪௫, ௨௮௯, ௩௩௫, ௩௭௬, ௪௨௦, ௪௬௧, ௫௦௯

சென்னைப் பல்கலைக் கழக 125 ஆம் ஆண்டு விழா ௫௬

சேக்கிழாரடிகளுக்கு நினைவாலயம்—மு. பெருமாள், வேலூர் ௩௬௮

சேக்கிழார் திருக்கோயில் திருப்பணி தொடக்க விழா ௨௩௭

செல்வியின் ஐம்பத்தெட்டாம் ஆண்டு ௧

சைவமும் வைணவமும் தழைத்தோங்கும் தலைச்சங்காடு
—டாக்டர் இரா. கலைக்கோவன், எம்.பி.பி.எசு., டி.ஓ. ௨௧, ௫௨

தமிழகக் கல்லூரிகளில் தாமரைத்திரு. வ. சுப்பையா பிள்ளை நினைவுநாள்—நா. அனந்தபத்மநாபன் ௧௦௬

தமிழருமை சொல்லட்டும் !—வேலூர் ம. நாராயணன், எம்.ஏ. ௨௬

தமிழிசைக் காவலர் செட்டி நாட்டரசர்
—செந்தமிழ்க் காவலர் இராம பெரி. பெரிய கருப்பன் செட்டியார் ௪௦௦

தமிழிசையும் அழுகிறதே !—தெ. முருகசாமி, காரைக்குடி ௪௦௦

தமிழைக் காப்பாற்றுங்கள்—முதல்வருக்கு வேண்டுகோள்
—பெயரும் வேண்டான் ௪௬௭

தமிழைப் படி !—மன்றவாணன் ௧௧௨

தமிழ் ஆக்கம் பெறவேண்டுமானால் ? ௪௬௫

தமிழ் ஆராய்ச்சியும் தனிநாயக ஆய்வகமும்
—பேராசிரியர் டாக்டர் வே. அந்தனி ஜான் அழகரசன் அடிகள் ௩௩௨

தமிழ் எழுத்து—சில சிந்தனைகள்
—வெ. கோவலங்கண்ணன் A. A. I. A., A. M. S. A., சிங்கப்பூர் ௧௧௩

தமிழ் ஒலிப்பரப்பில் தமிழ்த்தேதி சொல்ல மறுப்பதேன் ?
—காந்தி அண்ணாமலை, இரங்கூன் ௧௧௧

தமிழ் புரிந்த தனித்தவம்
—ஆட்சிச்சொற் காவலர் கீ. இராமலிங்கனார், எம்.ஏ., ௩௫௭

தமிழ்ப் பண்புகளைக் காக்கும் தனிப்பெரும் இதழ் !
—இ. க. கந்தசுவாமி, கொழும்பு

தமிழ்ப் பல்கலைக்கழகம் முதல் பட்டமளிப்பு விழாவும் இராசராச சோழன் விருதும் —பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி ௨௯௬

தமிழ் வளர்ச்சிக்குத் தனிச் செயலர் ௩௪௧

தாயார் பிறந்த இடம் சதுரகிரிப் பட்டணமாம்—க. சி. கமலையா ௪௪௫

திருக்குறளுக்கும் மிளகிற்கும் சிலேடை—மூவரையன், தஞ்சை ருOக
திருக்குறளும் கலைச் சொல்லாக்கமும்
—கழக இலக்கியச் செம்மல், புலவர் இரா. இளங்குமரன் ச
திரு. தி. வை. சங்கரக் குமாரு அவர்களின் மணிவிழா எசு
திரு. மீ. ப. சோமு அவர்கட்கு ரூ. 20,000 பரிசு எஎ
துணிந்து விட்டால்... ?—நல்லார்க்கினியன் ருகூ
''துறவியின் புதையல்''—ஓர் அரிய படைப்பு !
—இரா. இளங்குமரன் கூசா
தூத்துக்குடி துறைமுகத்திற்குக் கொற்கைத் துறைமுகம் எனப் பெயரிடுக ! ந௨
தென்னாடுடைய சிவன் அக
தேவாரத்தில் 'பராய்'—பி. எல். சாமி, இ. ஆ. ப. கூஎ
தொடை வகை—திருமங்கலம் புலவர், வை. தங்கமணி ௨எந, ந௨சு
தொல்காப்பியமும் விகுதிகளும்
—பேராசிரியர் ச. அகத்தியலிங்கம் கசுூச, ௨௨௨
தொழிலதிபர் ஈசுவர ஐயர் மறைவு நஎரு
நாடுகாண் நெடுவரை—பி. எல். சாமி, இ. ஆ. ப. கருக
நாட்டாரைப் போற்றுவோம் நாம்
—தெ. முருகசாமி, காரைக்குடி. ௨ரு௨
நாவலர் ந. மு. வே. நாட்டார் நூற்றாண்டு விழா ௨சகூ
நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் நூற்றாண்டு விழா—ஆய்வுக் கூட்டம் கருச
நாவலா ? நாகமா ?—பி. எல். சாமி, இ. ஆ. ப ௨ருசு
நிலைப்பதில்லை !—கடலூர் மணிமாறன், க. மு., கல். மு. நOரு
''நூலைப் படி''—தெ. முருகசாமி, முதல்வர் இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி ௨சு
நூற்றாண்டும் இனிதே காண்க !
—வேலூர் ம. நாராயணன், எம். ஏ., கூஅ
பயன்மிக்க பழைய சில பட்டி மண்டப நிகழ்ச்சிகள்
—ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல். நசுகூ, நகூO, சசக
பழனியும் பழநியும்
—கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன் ௨ருந
பழுதுபட நினையேல்
—டாக்டர் சொ. சிங்காரவேலன் எம். ஏ., பிஎச். டி. சஎஎ

பாரதியின் புதிய ஆத்திசூடியில் சமுதாய விழிப்புணர்வு
—டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.எ., பிஎச்.டி. கங, சஅ, கoக, கஙஎ, கசுஎ
பால் நினைந்தூட்டும் தாய்—க. சி. கமலையா ஙoசு
பாவேந்தரின் அன்னையார்
—மா. அண்ணாதுரை, எம்.ஏ., பி.லிப்., எசி.பிஎச். டி. ஙஙo
பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்த நாள் : ஓர் உண்மை விளக்கம்
—M. அண்ணாதுரை, M. A., B. Lib. Sc, ஈரோடு கசஎ
பாஸ்கர சேதுபதி பாடிய திருவாலவாய்ப் பதிகம்
—க. சி. கமலையா ருoங
பிறந்து வளரும் பெரிய பணி
—தமிழ்த் தொண்டர் கோ. முத்துப்பிள்ளை கஎஎ
புதுமைப் பொங்கல்—நாகை வேலன் உoச
புத்தாண்டுச் சிந்தனை : குறிக்கோள்
—டாக்டர் சொ. சிங்காரவேலன், எம். ஏ., பி.எச். டி., உஉசு
புத்தாண்டுச் சிந்தனை : ஒழுக்கம்
—டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி. உருசு
பூம்புகார் கடலில் புதையுண்ட அழகம்மை
—பேராசிரியர் இரா. மதிவாணன் கஎச
பெண்மைக் காவலர்—திரு. வி, க.
—டாக்டர் சரளா ராசகோபாலன், எம்.எ., பிஎச்.டி.
உசுரு, ஙகூக
பெருந்தன்மைக்கு ஒரு பேரரசர் ஙகூஎ
பேராசிரியர் இராதாகிருட்டிணன் குடும்பநல நிதி உசுஉ
பேராசிரியர் மறை. திருநாவுக்கரசர் மறைவு ககூ
பேராசிரியர் மு. ரா. பெருமாள் முதலியார் அவர்கட்குத் தமிழ்ச் சான்றோர் பட்டம் ககசு
பைந்தமிழ்ப் பிறப்பே வாழி !—தெ. முருகசாமி, முதல்வர்,
இராமசாமிக் கல்லூரி, காரைக்குடி உகரு
பொழிந்தது மாமழை !
—மு. ரா. பெருமாள் முதலியார் உஉக
மகனும் மானும் ஆனும்
—கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன் அச
மணிவிழாக் கொண்ட மாண்பினர் வாழ்க! ஙஅஎ
மதிப்புரை ஙஅ, அo, ககஅ, கருஎ, உoஎ, உசஎ, உசுo, ஙஙஅ,
ஙஎஅ, சஉஉ, சசுங, ருகக

மரபியலில் ஓர் இடைப்பாடும் இடர்ப்பாடும்
—கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன் சரு

மறைத்திரு மறைமலையடிகளார் அறக்கட்டளை அ௯

மறை மாணிக்க வாசகனார் மறைவு கஅ

மிடற்றொலியியல்—முனைவர், வீ. ப. கா. சுந்தரம், மதுரை ௬௦, க௦எ

முத்தமிழ்க் காவலர் டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின்
கதிர் விழா க௯ச

முழையூர் கோயில் மாடக் கோயிலா ?
—டாக்டர் இரா. கலைக்கோவன், எம்.பி.பி.எசு., டி.ஓ. கசுசு

முறைப் பெயரும் முறையீடும்
—கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன் ௯௦௦

முறைப் பெயர் ஆய்வு
—கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன் ௯சச,
௯அச, சஉஅ......

முனைவர் அப்பாத்துரையார் வாழ்க ! ச௯

முனைவர் அப்பாத்துரையார்க்குத் திரு, வி. க. விருது உ௯அ

மைவண்ணப் பெருமாளுக்கோர் மாடக்கோயில்
—டாக்டர் இரா. கலைக்கோவன், எம்.பி.பி.எசு., டி.ஓ. சுக

யாதும் ஊரே; யாவரும் கேளிர் !
—பவானி சாகர் பெரு. தமிழ்வேந்தன் க௯ரு

யார் இனிமேல் தோன்றிடுவார் ?—நாஞ்சில் கா. கணபதி உகச

வருந்துதந்தோ !—நாஞ்சில் கா. கணபதி ௯அசு

வள்ளுவர் வழி நிற்போம் சஉரு

வாழ்க வ. சு. அவர்களின் புகழ் ! உ௦சு

வானொலி நிலையத்தாரின் வகைகெட்ட செயல்
—மு. ரா. பெருமாள் (ஆசிரியருக்குக் கடிதம்) ௯௯௯

விடுதலையும் கெடுதலையும்—நாகை வேலன் உருரு

விழிகள் வேர்த்தோம் !—வேலூர் ம. நாராயணன், எம்.எ., கஉஎ

வேண்டும்—நல்லார்க்கினியன் ௯ச

வையையும், வைகையும்
—கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன் உகரு

படங்கள்

தலைச்சங்காட்டு சைவ வைணவ திருக்கோயில்கள் ௨௪, ௨௫

(1) அருள்மிகு சங்கராண்யேசுவரர் பெருந் திருக்கோயி
லின் தென்புற நுழை வாயில்

(2) அருள்மிகு நாண்மதியப் பெருமாள் கோயில் உற்சவர்
வெண் சுடர்ப் பெருமாளும் தேவியரும்

(3) அருள்மிகு நாண்மதியப் பெருமாள் மாடக் கோயில்

டாக்டர் இராசா சர் அண்ணாமலை செட்டியார் அறக்கட்டளை
பரிசளிப்பு விழா (30—9—83)

'நமது செல்வம்' நூலாசிரியர் மீ. ப. சோமு அவர்கட்கு
நடுவர் மாண்புமிகு பி. ஆர். கோகுலகிருட்டிணன் ரூ. *20,000*
வழங்குதல் ௪௨

கழகம் வ. சுப்பையாபிள்ளை அறக்கட்டளை நிறுவு விழா (6-10-83)

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் கழக
ஆட்சியர் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள்
ரூ. *10,000*க்கான காசோலை வழங்குதல். ௪௨

முனைவர் கா. அப்பாத்துரையார்

*20—9—83*இல் நடைபெற்ற, சென்னைப் பல்கலைக்கழக
*125*ஆம் ஆண்டு விழாவில் டாக்டர் பட்டம் வழங்கப்
பெற்றார். ௪௩

திருவரங்கம் காட்டழகிய சிங்கர் திருக்கோயில் ௬௩

முள்ளிக் கரும்பூர் சிவன் கோயில் ௧௨௮

முழையூர் பரசுநாதர் திருக்கோயில் ௨00

அப்பர் பாடிய ஆறை வடதளியின் முகப்பு ௩௧௮

ஆஸ்திரேலிய பழங்குடி இனத்தவர் ௩௬0

குமரகுருபரர் குழந்தை வளர்ப்புப் பள்ளி 16ஆவது
ஆண்டு விழா ௩௭௬

டாக்டர் இராசா சர் முத்தைய செட்டியார் ௩௬௭

காளைத் தேவர் படிமமும் மணவழகர் படிமமும் ௪௩௨

———

அப்பர் அச்சகம். சென்னை-108.